நிகண்டு

T.D.R.C. NO. 1604

R.R. NO. 47-1-1890

MADRAS SCHOOL SERIES.

FIRST READER,

TAMIL.

BY

L. GARTHWAITE, B. A.,

LATE INSPECTOR OF SCHOOLS.

(PART I.)

EDITED BY WALTER JOYES,

Late Professor of Vernacular Literature, Presidency College.

நாவிதாரம்.

(முதல் பிரிவு.)

AUTHORIZED BY THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION.

Seventh Edition, Revised.—100,000 Copies.

Madras:

PRINTED AT THE LAWRENCE ASYLUM PRESS, MOUNT ROAD,

BY G. W. TAYLOR.

1889.

உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு.

சிறுவர்களுக்கு எழுத்துகளைப் படிப்பிக்கும்பொழுது சாதாரணமாய் ஆரம்பத்தில் உயிரெழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் படிப்பிக்கிறார்கள். கற்கிறதற்கு உயிர் மெய்களில்தானே இருநூற்றுப்பதினாறு எழுத்துகள் உண்டு; ஆய்தம் ஒன்று; ஆக இருநூற்றுப்பதினேழு எழுத்துகளைக் கற்றபிற்பாடுதான் சிறுவர்கள் சொற்களை வாசிக்கக்கூடும். ஆதலால் ஒரு பையன் வாசிக்கத்தொடங்குமுன் ஆறுமாதத்துக்குக் குறையாமல் வீணாகக் காலம்கழிக்கிறது அசாதாரணமல்ல. இந்த வழக்கத்தைச் சீர்திருத்த நாம் இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறோம். இந்தப் புஸ்தகத்தில் சிறுவர்கள் எழுத்துகளைக் கற்கத்தொடங்கும் தினமே பதங்களையும் வாசிக்கக்கூடும். ஒரு எழுத்தையும்கூடக் கற்காத ஒரு சிறுவன் இந்தப் புஸ்தகத்தைத் தொடங்கினால், மூன்று, நான்கு மாதங்களுக்குள் நன்றாய் வாசிக்கத்திறமையுள்ளவனாகலாம். இந்த புஸ்தகத்தைக் கீழே காண்பித்திருக்கிறபடி படிப்பிக்கவேண்டும்:—

1. முதல் பாடத்தில் சிறுவர்கள் மூன்று எழுத்துகளைப் படிக்கவேண்டியதாயிருக்கும். மற்றப் பாடங்களில் ஒரு எழுத்தைத்தான் படிக்கவேண்டும்.

2. ஒவ்வொரு பாடத்திலும் படிப்பிக்கவேண்டிய புதிய எழுத்து அந்தந்தப் பாடத்தின் தலைப்பில் பெரிய எழுத்தாகப் பதித்திருக்கிற பதத்தில் இருக்கின்றது. இந்தப் பதத்தின் உதவியால் சிறுவர்களுக்குப் புதியஎழுத்துகள் எளிதாய் ஞாபகத்தில்பதியும். ஆகையால் புதிய எழுத்தைப் படிப்பிக்கிறதற்குமுன் இந்தப் பதத்தைச் சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

3. அந்தப்பதத்திலுள்ள எழுத்துகளையெல்லாம் அவர்கள் முதல் உச்சரிக்கவேண்டும்; பிற்பாடு அவர்களுக்கு அப்புதிய எழுத்தைக் காண்பிக்கவேண்டும். அதின் உச்சாரணையை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்த பிற்பாடு அவர்களை மணலில் அல்லது கற்பலகையின்மேல் அந்த எழுத்தை எழுதச்சொல்லவேண்டும்.

4. பிற்பாடு பெரிதாகப் பதித்திருக்கிற பதத்தின்கீழே உள்ள உயிர்மெய்களை அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். பிறகு அவர்கள் அவைகளை எழுதவும் கற்பிக்கவேண்டும்.

5. பின்பு வாசகப்பழக்கத்திற்குமுன் இருக்கிற நூதன பதங்களைச் சிறுவர்களை வாசிக்கச்சொல்லி அவைகளின் அருத்தத்தையும் கேட்கவேண்டும்.

6. வாசகப்பழக்கத்தில் இருக்கிற பதங்கள் முன்பு வாசித்த பதங்களானதினால் வாசகப்பழக்கத்தை அதிகப் பிரயாசமில்லாமல் சிறுவர்கள் தாமே வாசிக்கக்கூடும். அவர்கள் வாசிக்கக் கற்றபிற்பாடு, உபாத்தியாயர் அவர்களை வாசிக்கச்சொல்லி கேட்டு, ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்தபிற்பாடு அதில் சிறுவர்களைக் கேள்விகேட்கவேண்டும்.

கடவுள் துணை.

நாலாதாரம்.

1. அ ஆ தி க.

அ | ஆ | ஆதி

அ ஆதி

2. அ து உ.

து | அது

அது	அது ஆதி
ஆதி	ஆதி அது

3. ஆ ர் ங.

ர் | ஆ

ஆர் ஆர்	ஆர் அது
அது ஆர்	அது ஆ

4. இது. ௪.

இ	இது
அ. இது ஆதி. இது ஆர்? இது ஆ.	ஆதி இது. இ. இது இ. ஆர் இது?

5. மரம். ௫

ர் + அ = ர | ம் + அ = ம

அ+ம்=அம் | ஆ+ம்=ஆம் | ர+ம்=ரம்

மரம்	ஆரது
அரம்	ஆம்

அது மரம்.	இது அரம்.
ஆம், அது மரம்.	ஆம் இது அரம்.

அது ஆர் மரம்?
இது ஆரது? அது ஆரது?
அ, ஆ! இது ஆர் அரம்?

ககரம்.

க் + அ = க | க் + க = க்க | க + ம் = கம்

அகரம்	மகரம்	துக்கம்	கதிர்.
இகரம்	ககரம்	அதிகம்	அக்கதிர்.

க. இது ககரம்.
ஆம், அது ககரம்.
இது கதிர்.
ஆம், அது கதிர்.
இது ஆர் மரம்.

இது அக்கதிர்.
இக்கதிர் அக்கதிர்.
ஆம், இது அக்கதிர்.
இ. இது இகரம்.
ம. இது மகரம்.

இது அதிகம் ஆம்.
அது அதிகம் ஆம்.
து. இது துகரம்.
அகரம் ஆதி.
அ, ஆ, இது துக்கம்!
இது துக்கம் ஆம்.

தக்கது.

த் + அ = த | த் + த = த்த

த் + தி = த்தி | த் + தம் = த்தம்

தக்கது	தரம்	அகத்தி	அத்தி	அதிக.
கத்தி	தகரம்	இரத்தம்	இத்தி	தக்க.

அது தக்கது.
ஆம் ஆம், அது தக்கது.
இது அத்திமரம்.
ஆம் ஆம், அது அத்தி.
ஆர் அத்திமரம், இது?
இது அரம், அது கத்தி.

இது ஆர் அரம்?
இது தக்க அரம்.
இது தகரம்.
அது தக்க மரம்.
அது தக்க அரம்.
இது இரத்தம்.

அகத்திமரம் தக்கது.
அது அத்திமரம்.
இது தக்க தரம்.
ஆம், அது தக்க தரம்.
இது அதிக தக்க மரம்.
இது அத்திமரம், அது இத்திமரம்.

3. ா = ஆ | தா = த் + ஆ.

க் + ஆ = கா | ம் + ஆ = மா | ர் + ஆ = ரா

காகம்	காகமா	கத்தாதா	அக்கா	தாதா
மாமா	மதுரம்	கத்தாது	கத்தும்	கதிரா
இராமா	மதுரமா	அம்மா	ஆமாம்	இராது

தாதா, இது காகமா?
ஆம், அது காகம்.
ஆ ஆ, மாமா, அரம் தா.
இது ஆர் அரம், மாமா?
அம்மா, அது மதுரமா?
அது அதிக மதுரம்.
மாமா, இது கதிரா?
ஆமாம், இது கதிர்.

இராமா, காகம் கத்தாதா?
ஆமாம், அது கத்தும்.
அக்கா, அது கத்தாதா?
அது கத்தாது.
இராமா அது ஆர்?
அக்கா, அது மாமா!
தாதா, இது மாமரமா?
ஆம், இது மாமரம்.

இது மதுரமா, அக்கா?
ஆமாம், இது அதிக மதுரம், இராமா.
தாதா, அது கத்துமா, கத்தாதா?
அது கத்தும், அதிகம் கத்தாது.
ஆ அம்மா, இது துக்கம்.
ஆமாம், இது அதிக துக்கம்.
மாமா, இது அதிகமா?
இராமா, அது அதிகமாக இராது.

அன்னம்.

ன்	ன் + அ = ன	ன் + ஆ = னா

தான்	இராமன்	அன்னம்	தனது
தானா	இராமனா	மதுரமான	தனதா
ஆனது	காத்தன்	மாமனார்	மான்
ஆனதா	காத்தனா	ஆகாரம்	இனம்

அம்மா! அன்னம் இதுதானா?
ஆம், இதுதான் அன்னம், இராமா.
அம்மா! அது அதிக மதுரம் தானா?
ஆர் அது, இராமனா? காத்தனா?
அது இராமன் தான், அக்கா
அது ஆர்? மாமன் தானா, அம்மா?
ஆமாம்! அது மாமன்தான், இராமா.
அக்கா! அன்னம் இனம் இதுதானா!
ஆமாம் இது அன்னம் இனம் தான்.
இது மதுரமான ஆகாரம் தானா, அக்கா?
ஆமாம், இது மதுரமான ஆகாரம் தான்.
ஆ, இதுதான் ஆகாரம், இராமா.
மாமா, இது மான் இனம் தானா?
இது மான் இனம் தான், இராமா.

வாத்து.

வ் | வ் + அ = வ | வ் + ஆ = வா

ஆனவன்	அவன்	வாத்தா	காத்தவன்
ஆனவர்	அம்மம்மா	வாத்து	வார்த்தது
இவன்	அவனது	ஆகாது	வார்த்தான்
இவர்	இவன்தான்	ஆகாதவன்	வானரம்

அக்கா, அது அவன் வாத்தா?
ஆம், காத்தா, அது அவனது தான்
மாமா, வானரம் அது தானா?
ஆமாம். வானரம் அது தான்.
அது ஆர், காத்தன் தானா?
அம்மம்மா, அது காத்தன் தான்.
ஆர் இது வார்த்தது, இராமன் தானா?
ஆம், அம்மா. இது வார்த்தது இராமன் தான்.
அம்மா, இராமன் அதிக ஆகாதவன்.
இராமா, வாத்து காத்தவன் ஆர்?
வாத்து காத்தவன் இவன் தான்.
இவர் ஆர், அக்கா?
இவர் தான் மாமனார், வா.
அம்மா, இவனா காத்தன்?
ஆம், காத்தன் இவன் தான்.

நகம்.

ந் | ந் + அ = ந | ந் + ஆ = நா

நமது	தந்தவர்	தந்தம்	கந்தன்
தந்தார்	அந்த	வந்தது	நந்தன்
வந்தானா	இந்த	தந்தவன்	கத்தினதா
வந்தாராம்	அந்தம்	தந்தது	கத்தினது

அம்மா, நமது மான் வந்தது.
அந்த மான் தந்தவர் ஆர், அக்கா?
நமது மாமனார் தாம் இந்த மான் தந்தார்.
இந்த மான் அதிக அந்தம் ஆனதா, அம்மா?
ஆமாம், இந்த மான் அதிக அந்தமானது தான்.
நமது மாமனார் வந்தாராம்.

இந்த தந்தம் அதிக அந்தம் ஆனதா?
ஆம், இந்த தந்தம் அதிக அந்தம் தான்.
இந்த தந்தம் தந்தவன் ஆர்?
இந்த தந்தம் தந்தவன் இராமன்.

அம்மா, காகம் வந்தது.
அம்மா, இந்த காகம் கத்தினதா?
கத்தினது இந்த காகம் தான்.

கற்றவன்.

ற் + அ = ற | ற் + ஆ = றா | ற் + ற = ற்ற

கற்றவன்	திறந்தவர்	தின்றான்
மற்றவன்	திறந்தவன்	மாற்றாது
தின்றவன்	தின்றானா	தின்றவர்

இது கற்றவன் நந்தன் தானா?
நான் தான் இது கற்றவன்.
இராமன் அது சற்றானா?
இராமன் வந்தானா? கந்தன் வந்தானா?
ஆர் அது தின்றவன், இராமனா, மாமனா?
அது தின்றவர் நமது மாமனார் தாம்.
அது திறந்தவர் ஆர்?
இது திறந்தவன் நான் தான்.
அது திறந்தவர் ஆர், இராமா?
மாமனார் தாம் அது திறந்தார்.
கந்தன் அது தின்றானா?
ஆமாம் கந்தன் அது தின்றான்.
நான் தந்தது மாற்றாது தா, இராமா.
அவன் அது மாற்றாது தந்தானா?
ஆம், அவன் அது மாற்றாது தந்தான்.
இது தந்தது அவனா, மற்றவனா?

நலம்.

ல் + அ = ல | ல் + ஆ = லா | ல் + ல = ல்ல

கல்	கலம்	அல்ல	தின்னலாம்
கல்லால்	மனம்	ஆனல்	தினத்தில்
அகலம்		காலம்	வந்தால்
நல்ல	கனம்	தரலாம்	வாராவதி

வாராவதி கல்லால் ஆனது.
அந்த கல் அதிக கனம் அல்லவா?
ஆமாம், அந்த கல் அதிக கனம்.
தாதா, இது கல்லா, அல்லது மரமா?
இது கல் அல்ல, மரம்தான்.

இந்த கலம் ஆர் கலம், மாமா?
இந்த கலம் இராமன் கலம் தான்.
இந்த அவல் தான் தின்னலாமா?
இந்த அவல் நாம் தின்னலாகாது.
மனம் ஆனல், அது தரலாம்.
இந்த தினத்தில் மாமனர் வந்தால் நல்லது.
இவர் வந்தது நல்ல காலம் தான்.

அந்த மாமரம் அதிக நல்லது அல்லவா?
இது அதிக நல்லது, அது ஆகாது.

பாத்திரம்.

1/

ப் + அ = ப	ப் + ஆ = பா	ப் + ப = ப்ப
பாத்திரம்	நாகப்பன்	அப்பம்
அப்பன்	பால்காரன்	பாதி
தகப்பனார்	கறந்து பார்	வந்ததற்காக

கந்தா, நமது மாமனார் வந்தார், பால் கறந்து தா.
இராமன் தன்மாமனார் வந்ததற்காக பால்கறந்தான்.
நமது அப்பன் வந்தார், பார் நந்தா.
இவர் நாகப்பன் தகப்பனார் தாம்.
அக்கா, அப்பம் தா.
இந்த அப்பம் தின், இராமா.
நாகப்பன் அப்பம் தின்றானா? அக்கா, பார்.
இந்த அப்பத்தில் பாதி தா, அக்கா.
இது அதில் பாதி தான்.

அந்த பாத்திரம் அதிக அகலம் ஆனது.
ஆம் அந்த பாத்திரம் பால் பாத்திரம்.
அந்த பாத்திரத்தில் பால் வார்த்தது ஆர்?
பால்காரன் அந்த பாத்திரத்தில் பால்வார்த்தான்.
அந்த பாற்கலம் ஆர் தந்தது?
அந்த பாற்கலம் தந்தவர் நாகப்பன் தகப்பனார்.

ி = இ.

க் + இ = கி	ந் + இ = நி	ப் + இ = பி
ம் + இ = மி	ர் + இ = ரி	ல் + இ = லி
வ் + இ = வி	ற் + இ = றி	ண் + இ = ணி

கி | தி | நி | பி | மி | ரி | லி | வி | றி | ணி

அதிர்கிறதினால்	தின்கின்றது	துலக்காமல்
ஆலமரம்	தின்பது	நன்றாக
ஆலமரத்தின்	தின்பான்	நிறமானது
ஆற்றின்	தின்றதினால்	நிற்கிறதினால்
கவிந்தது	தின்றால்	பக்கத்தில்
கனி	தின்னலாம்	பல்
காற்றில்	தின்னாது	பன்றி
தம்பி	துர்நாற்றம்	மாதிரி
தினம் தின்கிற	துலக்கி	மாமரத்தின்

ஆலமரம்.

அக்கா, அந்த ஆலமரத்தின் பக்கத்தில் காகம் வந்து அதன் கனி தின்கின்றது, பார்!

தம்பி, காற்றில் அந்த ஆலமரம் அதிர்கிறதினால், காகம்வந்து அதின் கனி தின்னாது.

அந்த ஆலமரம் நன்ருக கவிந்த மரம், அக்கா.

ஆம், அது ஆற்றின் பக்கத்தில் நிற்கிறதினுல் மிக நன்ருக கவிந்தது.

ஆலமரத்தின் கனி இரத்த நிறம் அல்லவா? நாம் ஆலமரத்தின் கனி தின்னலாமா?

தின்னலாகாது; நாம் தின்ன ஆலமரத்தின் கனி நல்லதல்ல, தம்பி. நாம் மாமரத்தின் கனி தின்னலாம்; ஆலமரத்தின் கனி தின்பது நல்லதல்ல.

பல் துலக்காமல் தின்றவன்.

இராமன் தினம் அப்பம் தின்கிற காலத்தில் பன்றி தின்கிற மாதிரி பல் துலக்காமல் அப்பம் தின்பான். இந்த மாதிரி அவன் தினம் தினம் அப்பம் தின்றதினுல், அவன் பல்லில் துர் நாற்றம் வந்தது. ஆதலால், தினம் தினம் அப்பம் தின்கிற காலத்தில், பல் துலக்கி அப்பம் தின்பது அதிக நல்ல மாதிரி.

உரல்.

ு = உ

த் + உ = து | ந் + உ = நு | ல் + உ = லு

ன் + உ = னு | ற் + உ = று

து | நு | லு | னு | று

அதல்லாமல்	உறி	பலத்த
ஆகிலும்	கரி	பலமானது
ஆகின்றன	கால கிரமத்தில்	பனமரம்
ஆனதினுல்	தத்தி	பிதற்றி
உதவி	திக்குவான்	பிதற்றுவான்
உதிர்கின்றது	நாரினுல்	பின்னலாம்
உத்திரம்	நுனிமரம்	வலி

பனமரம்.

அப்பா, பனமரத்தின் கனி உதிர்கின்றது, பார்! ஆம், பலத்த காற்று வந்ததினுல், பனமரத்தின் கனி உதிர்கின்றது.

பனமரத்தின் கனி கரிநிறம் அல்லவா?

ஆமாம், பனமரத்தின் கனி மாமரத்தின் கனி மாதிரி அந்தமானது அல்ல.

நாம் பனமரத்தின் கனி தின்னலாம், அல்லவா?

ஆம், தின்னலாம்; ஆனுல் அதிகம் தின்ருல் வலி ஆம்; ஆதலால் அதிகம் தின்னலாகாது. ஆகிலும் பனமரத்திஞல் பல உதவி ஆகின்றன.

ஆமாம், பனநாரிஞல் நாம் உறி பின்னலாம்.

அதல்லாமல், பனமரத்தின் உத்திரம் அதிக பலமானது.

அப்பா, பனமரத்தின் நுனிமரம் அதிக பலமானது அல்லவா?

அல்ல, அல்ல, பனமரத்தின் நுனிமரம் அதிக பலமானதல்ல.

நாகப்பன் திக்குவான் ஆனவிதம்.

நாகப்பன் தம்பி இராமன் திக்குவான் ஆனவன். ஆனதிஞல் அவன் தினம் தினம் திக்கி திக்கி பிதற்றுவான். இந்த மாதிரி நாகப்பனும் தினம் தினம் திக்கி திக்கி பிதற்றி வந்தான். இதனுல் காலகிரமத்தில் அவனும் தன் தம்பி மாதிரி திக்குவான் ஆனுன். ஆதலால் திக்கி திக்கி பிதற்றுவது நல்லமாதிரி அல்ல.

முன்பு.

ு = உ | ு = உ.

க் + உ = கு | ர் + உ = ரு | ம் + உ = மு

ப் + உ = பு | வ் + உ + வு

கு | ரு | மு | பு | வு

அலறுகிற	தமது	மிதமற்று
அவனுக்கு	தாக்கின	மிதமாக
அறிவி	தாக்கினதினால்	முகாந்தரம்
அன்று	துரிதமாக	முதலான
இரத்தமும்	நிற்கும்	முற்றிலும்
உனக்கு	பறித்து	வருகிற
காலுக்கு	மருந்து	வருகின்றது
குத்தினால்	மிகவும்	வலிக்கிறது

தப்பு கல்லினதா நமதா?

அப்பா கந்தா, அலறுகிற முகாந்தரம் அறிவி.

அம்மா, நான் வருகிற காலத்தில் அந்த கல்லு காலில் தாக்கினதினால், கால் மிகவும் வலிக்கிறது; காலில் இரத்தமும் வருகின்றது!

நல்லது, நான் வந்து காலுக்கு மருந்து குத்தினால் இரத்தம் நிற்கும்.

ஆம் அம்மா, மருந்து குத்தினதினுல் இரத்தம் வாராமல் நிற்கிறது!

அம்மா, காலில் தாக்கின கல்லு நல்ல கல் அல்ல. அந்த கல்லு காலில் தாக்கினதினுல் தான் காலில் இரத்தம் வந்தது.

அது நல்ல கல்லுதான்; ஆனுல் பார்த்து வாராததினுல் த்தான் அந்த கல்லு உன் காலில் தாக்கினது. அதினுல்தான் உன் காலில் இரத்தம் வந்தது.

ஆ, ஆ! இனி நான் மிகவும் கவனமாக பார்த்து வந்தால், கல்லு காலில் தாக்காது; காலில் இரத்தமும் வராது.

மிதமற்று தின்றவனுக்கு வலி வந்தது.

கந்தன் தகப்பனுர் தமது மாமரத்தில் பத்து கனி பறித்து தமது மகனுக்கு தந்தார். அவன் அந்த தினத்தில் மிகவும் துரிதமாக தான் மாத்திரம் அந்த கனி முற்றிலும் தின்ருன். அதனுல் அவனுக்கு அதிக வலி வந்தது. ஆதலால், தம்பி, உனக்கு தகப்பனுர் மாமர கனி முதலான கனி தந்தால், கந்தன் தின்ற மாதிரி தின்னுமல் மிதமாக தின்னு.

டக்கு.

ட் + அ = ட | ட் + ஆ = டா | ட் + இ = டி

ட் + உ = டு | ட் + ட = ட்ட

அகப்படாதா	உடம்பு	துப்பாக்கி
அகப்படும்	உடன்	நாற்காலி
அடுப்புக்கு	உட்கார்ந்து	பக்குவமாக
அப்படி	கருகி	பற்றினதினால்
ஆக்கப்பட்டது	காட்டிலும்	பிரம்பு
ஆடப்படாது	குன்றிலும்	பின்னப்பட்டு
ஆடுகிறவனுக்கு	தகப்பனாரிடத்தில்	புட்டி
இருக்கின்றது	தடிப்பானதாக	முகமும்
இருக்கும்	திருடி	முருகன்
இவ்விடத்தில்	திறந்தான்	வருத்தப்பட்ட

நாற்காலி.

அப்பா, இந்த நாற்காலி ஆரால் ஆக்கப்பட்டது?

இந்த நாற்காலி நாற்காலிக்காரனால் ஆனது.

அப்பா, இந்த நாற்காலி ஆனவிதம் அறிவித்தால் மிகவும் நல்லது.

இந்த நாற்காலி மரத்தினால் ஆக்கப்பட்டு, நடுவில் பிரம்பினால் பின்னப்பட்டு இருக்கின்றது.

பிரம்பினுலா பின்னப்பட்டு இருக்கின்றது?

அல்ல அல்ல, நாரினுல் பின்னப்பட்டிருக்கின்றது.

நாரினுல் பின்னப்பட்டது அல்ல, பிரம்பினுல் தான் பின்னப்பட்டிருக்கின்றது.

பிரம்பினுலா? பிரம்புதடிப்பானதாக இருக்கும், அல்லவா?

ஆம்; ஆனுல் பிரம்புக்காரன் மிகவும் பத்திரமாக அறுத்து பக்குவமாக பின்னுவான்.

பிரம்பு இவ்விடத்தில் அகப்படாதா, அப்பா?

அகப்படாது; காட்டிலும் குன்றிலும் பிரம்பு அகப்படும்.

துப்பாக்கி மருந்து புட்டி.

முருகன் தகப்பனுரிடத்தில் புட்டி துப்பாக்கி மருந்து இருந்தது. அவன் தன் தகப்பனுர் உத்தரவு இல்லாமல் அந்த மருந்து புட்டி திருடி அடுப்புக்கு பக்கத்தில் உட்கார்ந்து திறந்தான். திறந்த உடன் மருந்து அடுப்பில் உதிர, அது பற்றினதிஞல் அவன் உடம்பும் முகமும் கருகி மிகவும் வருத்தப்பட்டான். ஆதலால் துப்பாக்கி மருந்து முதலானவற்றுடன் ஆடப்படாது. அப்படி ஆடுகிறவனுக்கு அதிக வருத்தம் வரும்.

அண்ணன்.

ண் + அ = ண	ண் + ஆ = ணா	ண் + இ =
ண் + உ = ணு	ண் + ண = ண்ண	

அண்ணா	கண்டாரா	நட்டால்
அற்புதம்	கண்டும்	பாட்டனார்
உண்ணுதற்கு	கண்ணால்	மண்ணில்
உண்டாகிற	கவர்	மதில்
உண்டாகும்	கன்று	மாணிக்கம்
உண்டானது	கிட்ட	முந்தி
கட்டினால்	நட்ட	வித்து

மாமரம்.

அண்ணா, நமது கல்மதிலுக்கு கிட்ட இருக்கிற மாமரம் பார்; அது ஆர் நட்டது?

அது நட்டவர் நம் பாட்டனார் தாம்; அந்த காலத்தில் அது கன்றாக இருந்தது.

நமது பாட்டனார் அந்த மாமரத்தின் கனி தமது கண்ணால் கண்டாரா?

ஆம், அவர் அதின் கனி கண்டும் இருக்கிறார், தின்றும் இருக்கிறார்.

அண்ணா, மாமரம் உண்டாகிற விதம் அறிவி.

நாம் மண்ணில் மா வித்து நட்டால், அதிலிருந்து மாமரத்தின் கன்று உண்டாகின்றது. அந்த கன்று வரவர மரம் ஆகின்றது, அல்லவா?

ஆம்; ஆனால் நமது மாமரத்தின் கனி அதிக மதுரமானதாக இருக்க, மாணிக்கம் தகப்பனார் நட்ட மாமரத்தின் கனி அதிக மதுரம் ஆகாத முகாந்தரம் அறிவி.

நமது பாட்டனார் நட்ட மாமரத்தின் கனி முந்தி அதிக தித்திப்பானது அல்ல; அதனால் நமது பாட்டனார் உண்ணுதற்கு நல்ல மாமரத்தின் கவர் கட்டினார். அதினால் தான் நமது மாமரத்தின் கனிக்கு அதிக மதுரம் உண்டானது.

அப்படி ஆனால், மாணிக்கம் தகப்பனாரும் நமது பாட்டனார் கட்டின மாதிரி கட்டினால், அந்த மரத்தின் கனிக்கும் அதிக தித்திப்பு உண்டாகும் அல்லவா?

ஆமாம்; அப்படி கட்டினால் அந்த மாமரம் அதிக தித்திப்பான கனி தரும்.

அண்ணா, வித்தில் மரம் இருக்கிறது அதிக அற்புதம் அல்லவா?

ஆமாம், அது மிகவும் அற்புதமானது தான்.

எ | ஏ.

ஆடலாமா	எகு	எடுக்கப்படுகிறது
ஆடுகிறான்	எகுவினால்	கருக்கானது
ஆணி	எடுத்து	துவாரம்
இடத்திலும்	எப்படி	துன்பப்பட்டான்
இரும்பிலிருந்து	எவ்விடத்தில்	பண்ணப்படும்
உண்டாக்கப்படு	என்ன	மணல்
உருக்கப்பட்டால்	எறி	மண்ணுடன்
உறுப்பு	காரணம்	மண்ணிலிருந்து

இரும்பும் எகுவும்.

அம்மா, தம்பி கத்தி எடுத்து ஆடுகிறான்.

அப்பா மாணிக்கம், கத்தி எடுத்து ஆடலாமா? கத்தி மிகவும் கருக்கானது. எடுத்து ஆடினால், உன் விரலில் அறுத்துவிடும்.

அம்மா, கத்தி கருக்காக இருக்கிற காரணம் என்ன?

அது எகுவினால் பண்ணப்பட்டு கருக்காக்கப் படுகிறதினால் மிகவும் கருக்காக இருக்கிறது.

அம்மா, எகு எவ்விடத்தில் உண்டாகின்றது?

அது எந்த இடத்திலும் உண்டாகிறது அல்ல அது இரும்பினால் உண்டாக்கப்படுகின்றது.

இரும்பு எவ்விடத்தில் அகப்படும்?

இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படுகிறது.

இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படுகிறகாலத்தில், இந்த கத்தி மாதிரிதான் இருக்குமா?

இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படுகிறகாலத்தில் மணல் மாதிரி மண்ணுடன் கலந்திருக்கும். அது தான் இரும்பு மணல்.

பின்பு அது எப்படி இரும்பு ஆகின்றது?

அந்த இரும்புமணல் உருக்கினால் இரும்பு ஆகும். இரும்பினால் ஆணி முதலான கருவி பண்ணப்படும். எகுவினால் கத்தி கத்தரி முதலான கருவி பண்ணப்படுகின்றன.

நன்றாக பாராமல் விரல் விட்டு பார்த்தவன்.

நாகன் குருவி பிடிக்க காட்டுக்கு வநது ஆல மரத்தில் ஏறி பார்த்தான். அந்த மரத்தில் துவாரம் இருக்க கண்டு அதில் குருவி இருக்கிறதா என்று அறிகிறதற்காக அதில் தன் விரல் விட்டு பார்த்தான். அந்த துவாரத்தில் இருந்த எலி அவன் விரலில் கடித்தது. அதனால் அவன் அதிக துன்பப்பட்டான். ஆதலால் நன்றாக பாராமல் துவாரத்தில் விரல் முதலான உறுப்பு விட்டு பார்க்கிறது நல்ல புத்தி அல்ல.

கெம்பு | கேணி.

ெ—=எ | ே—=ஏ

க் + எ = கெ | க் + ஏ = கே

கெ	டெ	ணெ	தெ	நெ	பெ	மெ	ரெ	லெ	வெ	றெ	னெ
கே	டே	ணே	தே	நே	பே	மே	ரே	லே	வே	றே	னே

அநேகர்	கேட்டான்	பெருவானரம்
இருக்கிறானே	கேலி	பேரெல்லாருக்கும்
ஏதேது, என்	தெரிந்து	மேலே
கண்ணே	தெருவில்	வானரம்
காட்டுகிறேன்	நில்லாதே	கெட்டிக்காரன்
வெகு	நேர்த்தி	வேறெதுவும்

வானரம் ஆட்டுகிறது.

அம்மா, நமது தெருவில் வானரம் ஆட்டுகிறவன்வந்து நெடுநேரம் வானரம் ஆட்டுகிறான்.

நல்லது, என் கண்ணே, நான் வானரம் ஆடுகிறது காட்டுகிறேன், வா.

அம்மா, அந்த குட்டி வானரம் அந்த பக்கத்திலேதானே ஆடமாட்டேன் என்று உட்கார்ந்திருக்கிறது.

ஆமாம்; அதற்கு இன்னும் நன்றாக ஆடதெரிந்து இராது.

அம்மா, அந்த பெரு வானரம் ஆடுகிறது வெகு நேர்த்தி. ஆடு என்ருல், வேறெதுவும் பாராமல் ஆடுகிறதே.

ஆம்; ஆனுல் தம்பி, வானரத்தின் கிட்ட நில்லாதே.

அம்மா, அது தடிக்குமேலே தாண்டுகிறது, பார்.

ஆம், அந்த மனிதன் ஏதேது காட்டிஞலும் அந்த விதம் எல்லாம் அந்த வானரம் பண்ணும்.

அவன் வானரத்திற்கு குல்லா இட்டிருக்கிருனே, ஏன்?

வானரத்துக்கு குல்லா இட்டு ஆட்டிஞல்தான், பார்க்கிற பேரெல்லாருக்கும் அதிக கேலி ஆக இருக்கும்.

கல்வி.

நாகப்பட்டணத்திலே கனகராமன் என்ற கல்விமான் இருந்தார். அவரிடத்தில் அநேகர் வந்து படித்து வருகிறது உண்டு. அவரிடத்தில் முருகன் வந்து தனக்கு கல்வி கற்பிக்க மிகவும் வருந்தி கேட்டான். அவ்வாறே அவர் அவன் கேட்டபடி அவனுக்கு கல்வி கற்பித்து வந்தார். அவன் மிகவும் துரிதமாகவே தன் பாடம் படித்து வந்ததிஞலே மிகவும் கெட்டிக்காரனும் பணக்காரனும் ஆனுன். ஆதலால், தம்பி, துரிதமாக உன் பாடம் படித்துவந்தால், அதிக கெட்டிக்காரன் ஆகலாம்.

ஒ | ஓ

ஒரு	ஒன்பது	கெடுதி	நேரிட்டதால்
ஒலி	ஓடி	நேராக	வேகமாக

எலி பிடிக்கிறவன்.

அக்கா, பார்! அந்த துவாரத்தில் ஒரு எலி புகுந்து இருக்கிறது.

ஓ, ஓ, தம்பி! அதின் வால் மாத்திரம் நமக்கு தெரிகின்றது.

அந்த துவாரத்தில் ஒரு விதமான ஒலி கேட்கிறதே, அது என்ன?

இந்த எலி தவிர அந்த துவாரத்தில் இன்னும் அநேக எலி இருக்கின்றன என்று எண்ணுகிறேன். இப்படி அந்த எலி ஒருமித்து கத்துகின்றன.

ஏன் இந்த மனிதன் இப்படி ஓடிவருகிறான்?

அவன் எலி பிடிக்கத்தான் இப்படி வேகமாக ஓடி வருகிறான் என்று எண்ணுகிறேன்.

நிலத்தில் இருக்கிற துவாரம் எல்லாம் நிரப்பி விட்டு, மண்வெட்டி எடுத்து வெட்டி, ஒன்றுவது ஓடி விடாமல் பிடிப்பான்.

ஓ, ஓ, துவாரம் எல்லாம் ஒன்று ஒன்ருக நிரப்பிவிடுகிருன்!

பார், இரண்டு எலி பிடித்துவிட்டான்!
ஆமாம், பின்னும் இரண்டு எலி பிடித்தான்.
பின்னும் ஒருமிக்க நாலு எலி பிடித்தான்.
ஆம், பார்! இன்னும் ஒரு எலி பிடித்தான்.
இது மற்ற எல்லாவற்றிலும் பெரிது.
ஒரு விநாடி நேரத்தில் ஒன்பது எலி பிடித்து விட்டானே! இவன் மிகவும் கெட்டிக்காரன்தான்.

கல் எறிந்ததினுல் வந்த கெடுதி.

ஒரு தினம் இராமன் தம்பி இரத்தினம் கல் எடுத்து எறிந்தான். அந்த கல் தெருவில் நின்றிருந்த அவன் அண்ணன் முகத்திற்கு நேராகவந்து இடக்கண்ணில் பட்டது. அதனுல் இராமன் அதிக வருத்தப்பட்டான். அந்த கண்ணுக்கு கெடுதி நேரிட்டதால், இராமன் குருடன் ஆனுன். அண்ணன் வருத்தம் பார்த்து, தம்பி மிகவும் துக்கித்தான். அவன் தகப்பனுரும் இதினுல் மனவருத்தப்பட்டார். ஆனதால் அவன் தகப்பனுர்—இனிமேல் கல்லாட்டம் ஆடவேண்டாம் என்று திட்டம் பண்ணினுர். துன்பத்திற்கு காரணமான ஆட்டம் மிகவும் கெட்டது என்று அவன் இதனுல் அறிந்தான்.

ெ—+ா=ொ | ே—+ா=ோ

க்+ஒ=கொ | க்+ஓ=கோ

கொ, கோ,	நொ, நோ,	றொ, றோ
டொ, டோ,	பொ, போ,	லொ, லோ
தொ, தோ,	மொ, மோ,	வொ, வோ

அடிப்பாரோ	வேண்டிக்கொண்டா[லும்	பார்த்தாலோ
இதோ	தொந்தரவு	பொல்லாதது
இப்போது	தொப்பு	போகிறான்
எப்போதும்	தோட்டக்காரன்	போடுகிறான்
ஒற்று	தோட்டத்திற்கு	முன்போலே
கண்டோமே	நொண்டி	மெதுவாக
கொடுத்தான்	நோக	மோகா
கொண்டு	நோவு	வேறே

எண்ணத்தினாலோ | கேட்டுக்கொண்டிருந்த
ஓடிப்போகமாட்டாமல் | திருடுகிறதற்காகவோ

திருடன் தொந்தரவுபட்டது.

16

மோகா, இந்த கல்மதிலின் துவாரத்தினுல் பார்; அதோ, பால்காரன் மகன் கந்தன் மாமரத் தின்மேல் ஏறுகிருன்.

அவன் என் மாமரத்தின்மேல் ஏறி போகிருன்? மாமரத்தின் கனி திருடுகிறதற்காகவோ, வேறே எண்ணத்தினுலோ?

அவன் எப்போதும் பொல்லாதவன்; கனி திருடத்தான் ஏறுகிருன் என்று நான் எண்ணு கிறேன்.

இதோ, அந்த பக்கத்தில் தோட்டக்காரன் நின்று பார்த்துக்கொண்டு இருக்கிருன்!

கந்தன் இப்போது நாலுபக்கமும் பார்க்கிருன்.

தோட்டக்காரன் நின்றிருக்கிறது அவன் பார்த் தாலோ, என்ன பண்ணுவான்?

அவன் ஒன்றும் பறிக்காமல் வந்துவிடுவான்.

இப்போது கந்தன் கனி பறித்து போடுகி ருன். அது தொப்பு தொப்பு என்று கேட்கிறது.

அவன் இப்போது என்ன பண்ணுகிருன்?

குதிக்கிறதற்கு பார்க்கிருன். பின்னும் முன் போலவே நாலு பக்கமும் பார்க்கிருன்.

அவன் அதிக மெதுவாக மரத்தடிக்கு வந்து குதித்துவிட்டான். தோட்டக்காரனும் ஒரு தடி எடுத்துக்கொண்டு ஓடிவருகிறுன்.

தோட்டக்காரன் ஓடிவருகிறது பார்த்து கந்தன் மிகவும் திகில் படுகிறுன். அதிஞல் அவன் உடம்பு கால் எல்லாம் உதறுகிறது.

இதோ, வேண்டிக்கொண்டாலும், அவனை விடாமல், தோட்டக்காரன் அடித்து தொந்தரவு பண்ணுகிறுன்.

கந்தன் பறித்த கனி எல்லாம் தோட்டக்காரன் எடுத்துக்கொண்டு, அடித்து வெருட்டுகிறுன். ஆஞல் கந்தன் ஓடிப்போகமாட்டாமல் நொண்டி நொண்டி மெதுவாக நடக்கிறுன்.

ஆமாம்; கந்தன் மிகவும் பொல்லாதவன் ஆனதிஞலேதான் திருடிஞன். அப்படி அவன் திருடினதிஞலேதான் உடம்பு நோக அடிபட்டான்.

கந்தன் திருடினது அவன் தகப்பஞர் கேட்டால் அவரும் நன்றுக அடிப்பாரோ? அடித்தால் அவனுக்கு அதிக நோவு உண்டாகும். ஆதலால் திருட்டு மிகவும் பொல்லாதது என்று நாம் இப்போது நமது கண்ணுல் கண்டோமே.

"நமதல்லாதது நாம் எடுத்தால் அது திருட்டு."

ஒரு தினத்தில் இராமன், முத்து என்ற இரண்டு பேர் ஒரு தோட்டத்திற்கு வந்து, ஒரு மாமரத்தில் நல்ல கனி இருக்க கண்டு, இராமன், முத்து என்பவனுடனே—இந்த இடத்தில் தானே நில்லு; நான் இந்த மரத்தில் ஏறி கனி பறித்து வருகிறேன்; நாம் இருவரும் தின்னலாம்—என்றான். அதற்கு முத்து இராமனுடனே — அப்படி பறிக்கிறது ஆகாது; இது நமது மரமல்ல; நமது அல்லாதது நாம் எடுத்தால் அது திருட்டு ஆகும். தோட்டக்காரன் பார்த்தால் அடிப்பான்—என்றான். ஒற்றுக் கேட்டுக்கொண்டிருந்த தோட்டக்காரன் இது கேட்டு முத்து என்பவனுக்கு அவன் நல்ல குணத்திற்காக ஒன்பது நல்ல கனி பறித்து வெகுமதி கொடுத்தான்.

ஆதலால் எந்த காலத்திலும் திருடாமல் எல்லாருக்கும் நல்லவனாக நடந்து வா.

ெ + ா = ொ | ே + ா = ோ.

ண் + ொ = ணொ | ற் + ொ = றொ | ன் + ொ = னொ

ணொ	றொ	னொ
ணோ	றோ	னோ

ஆறோர்	காணோம்	போடப்பட்டன
ஆற்றோரத்தில்	கும்பகோணம்	போராடும்
இன்னொரு	தானோ	மற்றொன்று
உண்டோ	நேற்றோ	வருகிறானோ
என்னவோ	பார்ப்போம்	வருகிறோம்

தபால்.

தம்பி நாகப்பா, தபால்காரன் வருகிற நேரம் ஆகின்றது; வருகிறானோ பார்த்து வா.

தபால்காரன் இன்னும் வரக்காணோம். எப்போதும் இதற்கு முன்னமே வந்துவிடுவான்; இன்று என்னவோ இன்னும் வரக்காணோம்.

இன்னொரு தரம் பார்த்து வா. இப்போது வருவான் என்று எண்ணுகிறேன்.

அம்மா, ஆரோ கதவு தட்டுகிறான். விடாமல் தட்டிக்கொண்டே இருக்கிறான்.

நாகப்பா, அது ஆர்? தபால்காரன் தானே? பார்த்து வா.

ஆம், அம்மா, தபால்காரன் தான்.

தபால்காரா, நகப்பனார் பேருக்கு கடிதம் உண்டோ?

ஆம், அநேகம் கடிதம் உண்டு; ஒன்று பட்டணத்திலிருந்தும் மற்றொன்று கும்பகோணத்திலிருந்தும் வந்திருக்கின்றன.

அப்பா, அநேகம் கடிதம் வந்திருக்கின்றன; ஒன்று பட்டணத்திலிருந்தும் மற்றொன்று கும்பகோணத்திலிருந்தும் வந்திருக்கின்றன.

கொண்டுவா, பிரித்து பார்ப்போம். பட்டணத்திலிருந்து வந்தது உன் மாமன் கடிதம்; கும்பகோணத்திலிருந்து வந்தது உன் அண்ணன் இடத்திலிருந்து வந்திருக்கலாம்.

நாகப்பா, நன்முக படித்தால், உன் மாமனர் இவ்விடத்திற்கு வரும்போது உனக்கு ஒரு நல்ல வெகுமதி கொண்டுவருகிறேன் என்கிருர்.

அண்ணன் கடிதத்தில் கண்டிருக்கிற கருத்து என்ன?

உன் அண்ணன் கும்பகோணத்தின் ஆற்ருேரத்தில் கட்டப்பட்டு இருக்கிற கல்விமடத்தில் படிக்கிருன்.

அப்பா, இவ்விரண்டு கடிதமும் எப்போது தபாலில் போடப்பட்டன? நேற்ருே?

நேற்று தான் போடப்பட்டன. இன்று இவ்விடம் இதோ இருக்கின்றன.

ஆ ஆ, ஒரே தினத்திலா நமக்கு காகிதம் வந்துவிட்டது!

ஆமாம்; இதற்கான எல்லா திட்டவட்டமும் நமது அதிகாரி ஆனவர் நடப்பித்து வருகிறதிஞல், நாம் அதிக இலகுவாக காகிதம் பெற்றுக் கொண்டு வருகிருேம்.

19

கோபத்தினுல் வந்த கேடு.

ஒரு வானரம் ஒரு கிணற்றின்மேல் உட்காந்து கொண்டு கிணற்றில் எட்டி பார்த்தது. அந்த கிணற்றில் தன் உருவம் கண்டு இன்னெரு வானரம் அந்த கிணற்றில் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு அதன்மேல் கோபமாகி அதனுடன் போராடும்படிக்கு அந்த கிணற்றில் குதித்து, தட்டித் தடுமாறியும் மறுபடி மேலே ஏறி வரமாட்டாமல் மாண்டது. ஆதலால் ஒன்றும் பாராமல் நாம் ஒன்று நடப்பித்தால், கேடு தான் வரும்.

சட்டி.

ச | சா | சி | சு | செ | சே | சொ

சோ | ச்ச

அமர்ந்த	சின்ன	சோதித்தால்
இராமசுவாமி	சுந்தரம்	தச்சன்
சட்டம்	செடி	தேக்கம் பெட்டி
சரி	செல்லு	தோணி
சவாரிவண்டி	சேதம்	பரிகாசம்
சன்னல்	சேதி	பேசிக்கொண்டு
சாதி	சொல்ல	மோதி
சாமான்	சொன்னான்	வாசல்கால்

தேக்குமரம்.

சுந்தரம், வந்து பார்! என் தகப்பனார் ஒரு புது பெட்டி கொண்டுவந்திருக்கிறார்.

ஆம், மாணிக்கம் எனக்கு சொன்னான். எவ்விடத்திலிருந்து கொண்டுவந்தார்?

தச்சனிடத்திலிருந்து கொண்டுவந்தார்.

வா, நாம் அந்த பெட்டி பார்ப்போம்.

ஆ ஆ! அது தேக்கு மரத்தினால் பண்ணப் பட்ட பெட்டி அல்லவா, சுந்தரம்?

ஆம்; அதின் மேல்புறத்திலும் பக்கத்திலும் அடித்திருக்கிறதே; அதென்ன?

அதில் அடித்திருக்கிறது தகடு. தேக்குமரத் தினால் பண்ணப்பட்ட பெட்டிதான் என் மன துக்கு சரி ஆனது.

என் தேக்குமரத்தினால் பண்ணப்பட்ட பெட்டி மாத்திரம் உன் மனதுக்கு சரி ஆனது?

பார், அதின் பக்கத்திலும் மேல்புறத்திலும் அடித்திருக்கிற தகடு மிகவும் நேர்த்தி ஆனதாக இருக்கிறது! இராமசுவாமி தகப்பனாருக்கும் இப்படிப்பட்டபெட்டி இரண்டு இருக்கின்றன.

ஆ ஆ! சரி சரி! ஒரு தரம் என் பாட் டனாரும் இராமசுவாமி தகப்பனாரும் பேசிக் கொண்டு இருக்கும்போது, தேக்கு மரத்தில் செல்லு பிடியாது என்றும், எல்லா மரத்திலும் தேக்கு மரம் உறுதி ஆனது என்றும் என் பாட் டனார் சொல்ல கேட்டேன்.

என்ன! தேக்கு மரத்தில் செல்லு பிடிக்காதா? கந்தன் தகப்பனாரிடத்தில் ஒரு பெட்டி இருந்தது.

அதில் புத்தகம், துணி, காகிதம், கடிதம் இருந்தன; செல்லு பிடித்து அவற்றிற்கு எல்லாம் கெடுதி வந்ததே.

ஆமாம்; அது தேக்குமரப் பெட்டி அல்ல; சோதித்தால், அது மாமரப் பெட்டி ஆக இருக்கலாம். தேக்கம் பெட்டி ஆனல் செல்லு பிடிக்குமா? பிடிக்கவே பிடிக்காது.

இது நல்ல சேதிதான். தேக்கு மரத்தினுல் வேறே என்னென்ன பண்ணப்படுகின்றன?

அதினுல் வாசல்கால், சன்னல், சன்னல் சட்டம், கதவு, கட்டில், நாற்காலி பண்ணப்படுகின்றன என்று என் தகப்பனுர் சொல்லி இருக்கிருர்.

ஆமாம்; ஒரு தரம் என் மாமன் பேசிக்கொண்டு இருக்கும்போது தேக்கு மரத்தினுல்தான் கப்பல், தோணி, ஓடம், சவாரிவண்டி மற்ற பலவித சாமான் எல்லாம் பண்ணப்படுகின்றன என்று சொன்னுர்.

தேக்கு மரம் எல்லா மரத்திலும் உறுதி ஆனதால் அது நல்ல சாதி மரம் என்று சொல்வது உண்டு.

தேக்குமரமும் நாணலும்.

ஒரு ஆற்றோரத்தில் மகா பலமான ஒரு தேக்கு மரமும் ஒரு நாணலும் நின்றன. ஒரு தினம் தேக்கு மரம் நாணலுடனே—அடா, மிகவும் அற்பமான நாணலே, பார், நான் அதிக பலமாகவும் உறுதி ஆகவும் நிற்கிறேன். காற்று மிகவும் பலமாக என்மேல் அடித்துமோதினாலும் எனக்கு அற்ப சேதமும் வராது. செடி அல்ல, செட்டு அல்ல, அற்ப புல்மாத்திரம் ஆன உனக்கோ, ஒரு சிறு காற்றுக்கு முன்னும் நிற்க பலம் இருக்கமாட்டாது—என்று சொல்லி பரிகாசம் பண்ணிற்று. உடனே ஒரு பலத்த காற்று வந்து அதின் மேல் மோதி அடித்ததினால், அது வேரோடே பேர்க்கப்பட்டு நிலத்தில் படிந்து கிடந்தது. நாணலோ காற்று அமர்ந்த உடனே, நிமிர்ந்து நின்றது. ஆதலால் நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் பத்திரமாக நிற்கவேண்டும்.

ஐந்து | கை.

ை — = ஐ.

க் + ஐ = கை | ச் + ஐ = சை

ஐ | கை | சை | டை | தை | நை

பை | மை | ளை | வை | றை

அடைவான்	என்றைக்காகிலும்	நிசம்
அதை	ஐந்தனை	பாத்திரத்தை
அவை	கை	பிரகாசமாக
அன்றைக்கு	சற்று	மறைக்கும்
இரண்டனை	சாதாரணமாக	முதலானவை
இரும்பை	சேர்ந்து	வெண்மை
இனை	தகரத்தை	வைத்து

தகரம்.

தம்பி, நான் கொண்டுவந்த இந்த பாத்திரத்தை பார். இது மிகவும் பிரகாசமாகவும் வெண்மை ஆகவும் இருக்கிறது.

ஆம் அண்ணு, இது இரண்டனை அணுவுக்கு

கொண்டதா? அன்றைக்கு ஒருவன் இந்த மாதிரி பாத்திரத்தை இரண்டளா அணுவுக்குக் கொண்டான்.

அல்ல, நான் இதை ஐந்தணா அணுவுக்கு கொண்டேன்.

தம்பி, இதைத் தொட்டுப் பார். மிகவும் மெதுவாக இருக்கிறது.

ஆமாம், அண்ணு, இப்படிப்பட்ட பாத்திரத்தை பண்ணுகிறவன் ஆர்?

இப்படிப்பட்ட பாத்திரத்தை பண்ணுகிறவன் தகரக்காரன் தான்.

அண்ணு, இது எதனல் பண்ணப்படுகிறது?

இது இரும்பினல் பண்ணப்படுகிறது.

இரும்பினலா? அது எப்படி? இரும்பு கறுப்பு நிறமானது அல்லவா? இந்த பாத்திரம் வெண்மை நிறமானதாக இருக்கின்றது, அல்லவா? அதை சற்று சொல்லவேண்டும்.

ஆம், நிசம்தான்; ஆனல் இரும்பை மறைக்கும்படிக்கும் துரு எருதபடிக்கும் இருப்புத் தகட்டில் தகரம் தடவுகிறது உண்டு. அந்த தகரம்தான் இப்படி வெண்மை ஆகவும் பிரகாசம் ஆகவும் இருக்கின்றது.

இப்படி தகரம் தடவின இருப்புத் தகட்டுக்கு பேர் என்ன?

அதற்கு தகரத் தகடு என்று பேர்.

இப்படிப்பட்ட தகட்டினுல் இன்னும் என்னென்ன பண்ணுகிறது உண்டு?

அதனுல் தொட்டி, பாத்திரம், பெட்டி முதலானவை பண்ணப்படுகின்றன. ஆகிலும் அவை இருப்பு சாமான் என்று அல்ல, தகரசாமான் என்றே சொல்லப்படுகின்றன.

தகரத்தை எவ்விடத்தில் கண்டு எடுக்கலாம்?

தகரம் இரும்பைபோல மண்ணிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது.

கேலிபண்ணுகிறவன் துன்பம் அடைந்தது.

ஒரு பிராமணனுக்கு ஒரு மகன் இருந்தான்; அவன் மிகவும் கெட்டவனுகவும் இடக்குக் காரனுகவும் இருந்தான். ஆராக இருந்தாலும் கேலி பண்ணுவான். ஒரு தினத்தில் அவன் ஒரு கிராமத்திற்கு தன் தகப்பனுடன் சேர்ந்து

போக நேரிட்டது. தகப்பன் தன் மகனுக்கு முன்னே நடந்துபோனுன். 'இப்படி இருவரும் போகும்போது, அந்த பொல்லாதவன்—புலி வருகின்றது, புலி வருகின்றது—என்று கத்தினுன். தகப்பன் திரும்பி பார்த்தபோது, புலி வருகிறதை காணுததினுல், முன்போலவே திரும்பவும் முந்தி நடந்து போனுன். அதன் பிற்பாடு நிசமாகவே ஒரு பெரும் புலி வந்துவிட்டது. மகன் திரும்ப திரும்ப—புலி வந்துவிட்டது, புலி வந்துவிட்டது—என்று உரத்து உரத்து கத்தினுன். அவன் எப்படி உரத்து கத்தினுலும் அவன் பேச்சை நம்பாமல், தகப்பன் தன் மகன் கேலி பண்ணுகிறுன் என்று எண்ணி திரும்பி பாராததினுல், அந்த புலி கவ்வி எடுத்துக்கொண்டு ஓடிவிட்டது. இதனுல் அந்த கெட்டமகன் தன் கெட்ட குணத்தினுலே அந்த பெரும் புலிக்கு இரை ஆனுன். ஆதலால் கேலிக்காரன் என்றைக்காகிலும் ஒரு தினத்தில் துன்பம் அடைவான்.

ஊ — = ஐ.

ண் + ஐ = ணை | ல் + ஐ = லை | ன் + ஐ = னை

ணை | லை | னை |

அக்கறை	என்னை	நனைத்து
அபாண்டத்தை	ஒருவனை	நன்மை
அமரிக்கை	கட்டை	பின்னை
அவனை	சுத்தம்பண்ணி	மண்ணை
ஆற்றை	சுமப்பித்து	மறைந்து
இரத்தத்தை	சொத்தை	வாக்குவாதம்
இலை	தன்னை	விரலை
இல்லை	திண்ணை	வைத்துவருகிறது
உட்டணமாக	துடைத்து	வைத்துவிட்டு

கத்தி எடுத்து ஆடினதினால் வந்தது.

தம்பி சுந்தரம், வந்து பார். என் கால் விரலை நாகப்பன் வெட்டிப்போட்டான்; அது மிகவும் புண்ணாக இருக்கிறது.

ஆம், மிகவும் புண்ணாகதான் இருக்கிறது. அவனை அடித்தது உண்டோ?

இல்லை; நான் அவனை அடிக்கவே இல்லை.

அவனும் நானும் ஆடிக்கொண்டு இருந்தோம்; அப்போது வெட்டிப்போட்டான்.

அவனை அடிக்காமல் இருந்தால் ஏன் அவன் உன் கால் விரலை வெட்டினான்?

நான் திண்ணைமேல் உட்காந்து இருந்தேன். அப்போது அவன் ஒரு கத்தி எடுத்துக்கொண்டு ஓடி வந்தான்; அவனும் நானும் ஆடிக்கொண்டு இருக்கும்போது, அந்த கத்தி அவன் கை தவறி என் காலில் பட்டது.

அவனுக்கு அந்த கத்தி கொடுத்தது ஆர்? அவன் அதை திருடினானோ?

அந்த மலைமேல் ஒருவன் விறகு வெட்டிக் கொண்டு இருந்தானும். அவன் விறகு வெட்டி தீர்ந்த பிற்பாடு ஒரு மரக்கட்டைமேல் கத்தி வைத்துவிட்டு, மரத்தில் இலை பறித்துக்கொண்டு இருக்கும்போது, தன்னை பாராதபடி மறைந்து இருந்து கத்தி எடுத்துக்கொண்டு ஓடிவந்து விட்டேன் என்று அவன் சொன்னான்.

இப்படி ஒருவனைக் காணுமல் அவன் சொத்தை எடுத்துக்கொண்டு ஓடுகிறது தப்பிதம் என்று அவனுக்கு ஏன் சொல்லவில்லை?

சொன்னேன்; ஆனால் என் கால் விரலில் இரத்தத்தை கண்டவுடன் அவன் ஓட்டம் பிடித்தான்.

ஏன் ஓடிவிட்டான்? அவனை உன் தகப்பனார் அடிப்பார் என்று திகில்பட்டு ஓடினானோ?

என்னவோ, கத்தி எடுத்துக்கொண்டு ஆடின தினாலே அல்லவா இப்படி வந்தது? ஆதலால் இனிமேல் நான் கத்தி எடுத்து ஆடுகிறதுமில்லை, கத்தி எடுக்கிறவனுடன் சேருகிறதும் இல்லை.

சரி; இது தான் புத்தி. பின்னை முன்னமே ஏன் அப்படி நடக்கவில்லை?—அந்த புண்ணுக்கு என்ன போட்டிருக்கிறது?

ஒன்றும் போடவில்லை; இரத்தம் வராதபடிக்கு மண்ணை போட்டேன்.

புண்ணுக்கு மண்ணை போடலாமா? விரலை நன்றாக சுத்தம்பண்ணி துடைத்துவிட்டு ஒரு சிறு துணி எடுத்து சலத்தில் நனைத்து சுற்றி கட்டி வை. தகப்பனார் மருந்து போடுவார்.

நல்லது; அப்படி ஆகட்டும். நாகப்பன் கத்தியால் என் விரல் முற்றிலும் அறுபடவில்லை; இது எனக்கு பெரு நன்மைதான்.

குற்றமற்றவன்மேல் குற்றம் சுமத்தினது.

மிகுந்த உட்டணமாக இருந்த ஒரு தினத்தில் ஒரு புலி ஒரு மலை பக்கத்தில் ஓடுகிற ஒரு ஆற்றில் சலம் குடிக்க வந்தது. அப்போது ஒரு

ஆட்டுக்குட்டி அதற்கு இப்பால் அந்த ஆற்றில் குடித்துக்கொண்டிருந்தது. அப்போது அந்த புலி அதனோடு வாக்குவாதம் தொடுக்கவேண்டும் என்று எண்ணம்கொண்டு மிகவும் கோபத்தோடே — அடா, நான் குடிக்கும்போது என் ஆற்றை கலக்கி கெடுக்கவேண்டும் — என்று கேட்டது. ஆட்டுக்குட்டி மிகவும் அமரிக்கை உடன் — உம்மிடத்திலிருந்து அல்லவா, ஆறு என் பக்கமாக ஓடிவருகின்றது? என்மேல் இப்படி கோபிக்கலாமா?— என்றது. அதற்கு புலி — இது போகட்டும், ஆறு மாசகாலமாக என்னை வைது வருகிறதாக பலபேர் சொல்ல கேட்டிருக்கிறேன் — என்றது அதற்கு ஆட்டுக்குட்டி — நான் பிறந்து இன்னும் ஆறு மாசம் ஆகவில்லை; இப்படிப்பட்ட அபாண்டத்தை சொல்வது தருமம் அல்ல— என்றது. அதற்கு புலி — அது என்னவோ எனக்கு அக்கறை இல்லை; ஒரு காலத்தில் உன் தகப்பனாகிலும் என்னை வைதிருப்பான்; அதற்கு ஆர் உத்தரவாதி?—என்று அந்த ஆட்டை பிடித்து கடித்து கொன்று தின்று விட்டது. ஆதலால் கெட்டவன் காரணம் இல்லாமல் வாதாடி அக்கிரமம் பண்ணுவான்.

ய

ய | யா | யி | யு | யெ | யே | யை
யொ | யோ | ய்

அவையெல்லாம்	செய்யாது	பிரயோசனம்
ஆகையால்	செய்யும்	பெரிய
ஆயிரம்	சேற்றையும்	மறக்காது
இருக்கையில்	தையல்காரன்	யாதொரு
உயிரோடு	நன்றாய்	யானையின்
கடையின்	நிறமாய்	யானையை
கையை	நிறைய	யோசித்து
கொம்பாகிய	நேர்த்தியான	வேடிக்கையே
சிறியதாய்	பண்டத்தையும்	வேலையெல்லாம்

யானை.

அதோ, என்ன ஒரு பெரிய மிருகம் வருகிறது, பார், அண்ணா.

ஆமாம். அது யானை. யானை எல்லா மிருகத்திலும் பெரிது.

அந்த யானையின் நிறம், கறுப்பாய் இருக்கிறது. யானையின் முகத்தில் என்னவோ இருக்கிறதே! அதென்ன?

அதற்கு தும்பிக்கை என்று பேர்; அதுதான் யானைக்கு கையைப்போல உதவுகின்றது.

யானையின் கண் மிகவும் சிறியதாய் இருக்கின்றது, அண்ணு!

ஆம், யானையின் கண் மிகவும் சிறியதுதான்; ஆகிலும் அதனால் யானை வெகு சிறிய பண்டத்தையும் நன்ருய் பார்க்கும்.

இந்த யானை இப்போது எவ்விடத்திற்கு போகின்றது?

யானைப்பாகன் ஏறி இதை ஆற்றுக்கு கொண்டு போகிருன்.

அதை அவன் ஆற்றுக்கு கொண்டுபோய் என்ன செய்வான்?

யானையை நன்ருய் சுத்தம் பண்ணி, திரும்ப கொண்டுவருவான்.

யானையால் பிரயோசனம் என்ன?

யானை ஏறி சவாரி செய்ய உதவும்; எந்த மிருகமும் சுமக்கமாட்டாத பாரத்தை அது சுமந்துகொண்டு போகும். அதின் கொம்பாகிய தந்தத்தினால் மிகவும் நேர்த்தியான வேலையெல்லாம் செய்யப்படும்.

ஆனபடியினாலேதான் அதன் விலை அதிகமோ அண்ணா?

ஆம், யானை உயிரோடு இருந்தாலும் செத்தாலும் ஆயிரம் பொன் விலை யென்று சொல்வார்கள்.

யானை பெரிய மிருகமாக இருக்கிறதே, அது முரட்டுத்தனம் செய்யும் அல்லவா?

அது அப்படி செய்யாது. யானை வெகு சாதுவான மிருகம். பாகன் எதை செய்யச்சொன்னாலும் சொன்னபடி அது செய்யும். தனக்கு செய்கிற நன்மையை மறக்காது; தனக்கு பொல்லாப்பு செய்தால் அதையும் மறக்காது.

அது எப்படி அண்ணா?

அதற்கு குறும்பு செய்தவன் ஒருவனுக்கு அது யோசித்து குறும்பு செய்ததைக் குறித்து நம்முடைய பாட்டனார் ஒரு கதை சொல்லுவார்; அது மெத்தவும் வேடிக்கையே; அதை பல தரம் கேட்டு நான் சிரித்து இருக்கிறேன். இதோ அந்த கதையை சொல்லுகிறேன்.

யானைக்கு குறும்புபண்ணினவன் பட்டபாடு.

டில்லி என்கிற பட்டணத்தில் ஒரு தையல்காரன் கடை வைத்துக்கொண்டு இருந்தான். இப்படி இருக்கையில் ஒரு பகலில் ஒரு யானையானது அந்த பக்கமாய் சலம் குடிக்க ஆற்றுக்கு போயிற்று. யானைப்பாகன் அதை அந்த தையல்காரன் கடைக்கு பக்கத்தில் நிறுத்தினதினாலே, அந்த யானை அவன் கடையின் சன்னலில் தன் தும்பிக்கையை விட்டது. ஆனால் யாதொரு கெடுதி செய்யவேண்டும் என்று விட்டதல்ல. ஆகிலும் அந்த தையல்காரன் தன் பக்கத்தில் இருந்த கத்தரிக்கோலை எடுத்து குறும்புக்காக அதின் தும்பிக்கையில் குத்தினான். உடனே யானை தன் தும்பிக்கையை எடுத்துக்கொண்டு ஆற்றுக்கு போய் குடித்தபிற்பாடு சலத்தை சேறாகக் கலக்கி தும்பிக்கை நிறைய சலத்தையும் சேற்றையும் கொண்டுவந்து அதையெல்லாம் அவன் மேலும் அவன் அப்போது தைத்துக்கொண்டிருந்த விலை உயர்ந்த உடுப்பின் மேலும் இறைத்து எல்லாவற்றையும் கெடுத்துப்போட்டது. அதனால் சேதப்பட்டு அவன் இனிமேல் குறும்பு செய்யப்படாதென்று உணர்ந்துகொண்டான்.

ள

ள	ளா	ளி	ளு	ெள	ேள
ைள	ொள	ோள	ள்		

அவர்களில்	குளிரான	பிள்ளைகளோ
அவைகளுக்கு	குள்ளன்	பள்ளமாய்
அவைகளெல்லாம்	தவளைகள்	பிள்ளைகளில்
அனலாய்	தவளைகளும்	வந்தனம்
இருந்தார்கள்	தெளிந்து	விநயமாய்
உட்காந்து	தெளிவு	விளையாடி [ல்
குளம்	தேடுவார்களே	விளையாடினா
குளித்தால்	நினைக்கிறார்களா	வெயில்

குளம்.

முத்தையா, நாம் குளத்திற்கு போய் உடம்பு குளித்து வருவோம், வருகிறாயா?

நல்லது, அப்படியே ஆகட்டும்? நாம் குளிக்க எந்த குளத்திற்கு போகலாம்?

அந்த புறத்தில் இருககிற குளத்திற்கு போவோம்; அந்த குளத்தின் சலம் தான் அதிக தெளிவானதாயிருக்கிறது.

சலத்தில் விளையாடுகிறது உனக்கு பிரியமா?

இல்லை; ஏனெனில் அப்படி விளையாடினுல் தெளிந்த சலம் சேறுகும். அப்போது பக்கத்தில் குளிக்கிறவர்களுக்கு வருத்தம் உண்டாகும்.

முத்தையா, இந்த குளம் மிகவும் பெரிய குளம்; சலம் தெளிந்து நன்றுய் இருக்கிறது. நாம் போய் குளிப்போம், வா.

குளத்தின் நடுவிலே போகாதே; அதிக பள்ளமாய் இருக்கும்.

உடம்பை நன்றுய் தேய்த்து குளித்தால் தான் உடம்புக்கு சவுக்கியம்.

இலட்சுமணு, கரையில் தவளைகள் உட்கார்ந்து கொண்டு இருக்கின்றன, பார்.

என் அவைகளெல்லாம் கரையில் உட்கார்ந்திருக்கின்றன?

அவைகளுக்கு அதிக குளிரானபடியால் கரையில் இருந்து வெயில் காய்கின்றன. இப்போது சலத்தை கலக்கி பார்; அவைகள் சலத்தில் வந்து குதிக்கும்.

நான் அப்படியே செய்கிறேன்; தவளைகள் சலத்தில் குதித்து குதித்து போகின்றன.

ஆமாம், எல்லாத்தவளைகளும் வந்து சலத்தில் குதித்து விட்டன. சில தவளைகள் சலத்தில் நீந்திக்கொண்டு இருக்கின்றன.

சில கெட்ட பிள்ளைகளோ தவளைகள் சலத்தில் நீந்திக்கொண்டு இருக்கும்போது அவைகளை கல்லால் அடிக்கிறதுண்டு; அது மிகவும் கெட்ட வாடிக்கை.

அப்படி செய்கிறதினால் அவைகளுக்கு நோகாது என்று அவர்கள் நினைக்கிறார்களா? அப்படி நினைக்கிறது மிகவும் தப்பிதம். நமக்கு காயம் பட்டால் எப்படி நோவுண்டாகிறதோ, அப்படியே அவைகளுக்கு காயம்பட்டால் அவைகளுக்கும் நோவுண்டாகும்.

நாம் குளிக்க வந்து வெகு நேரமாயிற்றே? நாம் இப்போதே வீட்டுக்கு சீக்கிரமாய் போகா விட்டால், நம்முடைய தாய் தந்தையர் நாம் எங்கேபோனோம் என்று அறியாமல் நம்மை தேடுவார்களே. ஆகையால் நாம் போகலாம், வா.

தயையும் தயையின்மையும்.

ஒரு நாள் மத்தியானம் இரண்டு பிள்ளைகள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் பேர் குள்ளன், மற்றவன் பேர் சுந்தரம். வெயில் மிகவும் அனலாய் இருந்தது. அத்தருணத்தில் ஒரு பிச்சைக்காரன் வந்து குள்ளனிடத்தில் தாகத்துக்கு தா என்று கேட்டான். குள்ளன் மிகவும் பொல்லாதவன் ஆனதினாலே மண்ணை வாரி அவன் மேலே போட்டு, சேற்றை வாரி அவனை அடித்து கல்லாலும் கட்டியாலும் எறிந்தான். இதுவும் அல்லாமல் தன் வாயில் வந்தபடி எல்லாம் அவனை வைதான். பிச்சைக்காரன் மிகவும் மனவருத்தப்பட்டு சுந்தரம் என்பவனிடத்தில் வந்து எனக்கு குடிக்க சலம் கொடுக்கவேண்டும் என்று வெகு விநயமாய்க்கேட்டான். உடனே சுந்தரம் ஓடிப்போய் செம்பில் சலம் மொண்டு கொண்டு வந்து அவனுக்கு குடிக்க கொடுத்தான். அந்த பிச்சைக்காரன் குடித்த பிற்பாடு சுந்தரத்துக்கு வந்தனம் சொல்லி போய்விட்டான்.

இந்த இரண்டு பிள்ளைகளில் எவனிடத்தில் உனக்கு அதிகமாய் பிரியம் உண்டாகும்?

ங்

ங்க | ங்கா | ங்கி | ங்கு | ங்கே | ங்கொ

அங்கு	சுரங்கங்களில்	பழுவானது
அருமையாய்	செத்தை	பாத்திரங்கள்
அலங்காரமான	சொல்லுங்கள்	பித்தளைக்காப்பு
ஆயுதங்களை	சொற்பமாய்	மங்கி
உபயோகமானது	தாங்கள்	யோசித்து
உலோகங்களை	தாருங்கள்	வாங்கி
உளி	தேங்காய்	வாங்குகிற
எங்களுடன்	தோண்டி	வாள்
எங்கும்	நயமாய்	விளக்குகளும்
எங்கே	நாணயங்கள்	வெள்ளி
எண்ணெய்	பரதேசங்கள்	வெள்ளிக்காப்பு

பொன் வெள்ளி.

அப்பா, எங்களுடன் படிக்கிற ஒரு பையன் அங்கு வெள்ளிக் காப்பு போட்டுக்கொண்டு வருகிறுன். தாங்கள் எனக்கும் வெள்ளிக் காப்பு வாங்கி தாருங்கள்.

இல்லை, என் மகனே, வெள்ளிக்காப்பு வாங்குவதற்கு அதிக பணம் வேண்டுமே.

ஏன வெள்ளிக் காப்பு வாங்குகிறதற்கு அதிக பணம் வேண்டும்? பித்தளைக்காப்பு வெகு நயமாய் இருக்கின்றதே?

ஏனென்றால் வெள்ளி மிகவும் சொற்பமாய் அகப்படுகின்றது. உலகத்தில் அகப்படுகிற வெள்ளி மிகவும் சொற்பம்தான். ஆகையால் தான் வெள்ளிக்கு அதிக பணம் போடவேண்டும்.

அப்பா, வெள்ளி எங்கே அகப்படுகிறது?

பரதேசங்களில் இருக்கிற சுரங்கங்களில் இருந்து வெள்ளி வெட்டி எடுக்கப்படுகின்றது.

பித்தளையும் அந்த விதமாகவே தோண்டி எடுக்கப்படுகின்றதோ?

இல்லை; பித்தளை துத்தநாகத்தையும் செம்பையும் சேர்த்து உருக்குவதினாலே உண்டாகின்றது.

செம்பு கண்டிருக்கிறேன். செம்பினால் காலணா, அரையணா, காசு, துட்டு முதலான நாணயங்கள் செய்யப்படுகின்றன.

செம்பினால் பாத்திரங்களும் செய்யப்படுகின்றன, ஆனால், துத்தநாகம் இன்னதென்று உனக்கு தெரியுமா?

தெரியாது; தயவு செய்து சொல்லுங்கள், அப்பா.

துத்த நாகம், வெள்ளி, செம்பு, இரும்பு, தகரம் முதலானவைகளை போல ஒரு உலோகம் தான். அது மற்ற உலோகங்களைபோல சுரங்கத்தி லிருந்து வெட்டி யெடுக்கப்படுகின்றது. ஆனால் இவைகளெல்லாம் பொன்னைப்போல அத்தனை பிரகாசமும் பளுவும் ஆனவைகள் அல்ல.

ஆ, ஆ, பொன்னு! அது மிகவும் அலங் காரமான உலோகம்; மங்கிப்போகாது; அதைப் பற்றி சொல்லுங்கள், அப்பா.

பொன் எல்லா உலோகங்களிலும் பளுவான தும் பிரகாசமானதும் விலையதிகமானதுமா யிருக்கிறது. அது முக்கியமாய் ஆறுகளின் மணலில் அகப்படுகின்றது. ஆனால் மிகவும் சொற்பம்தான். ஆகையால் அது எங்கும் அதிக அருமையாய் இருக்கின்றது.

எல்லா உலோகங்களிலும் பொன் உபயோக மானது அல்லவா?

அல்ல; யோசித்து பார். நாம் மண்வெட்டி, உளி, வாள், கத்தி முதலான ஆயுதங்களை பொன்னினால் பண்ணுகிறோமா? இரும்பினால் பண்ணுகிறோமா? இரும்பினால் செய்கிறோம் அல்லவா? ஆதலால் இரும்புதான் எல்லா உலோகங்களிலும் உபயோகமானது.

புத்தியுள்ள மகன்.

ஒரு வர்த்தகனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்; அவர்களில் பெரியவன் பேர் பொன்னப்பன்; சிறியவன் பேர் முத்து. பொன்னப்பன் புத்திசாலி அல்ல; முத்து மிகவும் கெட்டிக்காரன். ஒரு நாள் அவர்கள் தகப்பன் அவர்களை வருவித்து ஒவ்வொருவனுக்கும் நாலு அணு கொடுத்து,—உங்களில் எவன் தான் வாங்குகிற பொருளால் தன் அறையை நிரப்பிவைக்கிறானோ அவனுக்கு மெத்த நல்ல இனும் கொடுப்பேன்; இன்று சாயந்தரம் எட்டுமணிக்கு வந்து பார்ப்பேன்—என்றான். பொன்னப்பன் போய் தனக்கு கிடைத்த நாலு அணுவுக்கும் செத்தை, வைக்கோல், காய்ந்த புல் முதலியவைகளை வாங்கி கொண்டுவந்து தனக்கு கொடுக்கப்பட்ட அறையில் பரப்பி நிரப்பி வைத்திருந்தான். முத்து யோசித்து தனக்கு கிடைத்த அந்த நாலு அணுவுக்கும் தேங்காய் எண்ணெயும் விளக்குகளும் வாங்கிவந்து, தன் அறையில் ஏற்றிவைத்திருந்தான். தகப்பன் வந்து பார்த்து முத்து என்பவனுக்கு அதிக நல்லவெகுமதி கொடுத்து அவனை மெச்சினான். ஆதலால் புத்திமான் பெரியவன் ஆவான்.

ஊ = ு = ூ = ூ

ஊ | கூ | சூ | டூ | பூ | மூ | யூ | ரூ | வூ | ளூ

அலசூர்	குரூரமாக	டாணாக்காரர்
அவ்வூரில்	கூட	நியாயதுரை
இடையூறு	கூட்டமாய்	பள்ளிக்கூடம்
இலேசாகவாவது	கூத்தாடி	பாண்டூரான்
உபாத்தியாயர்	கூத்து	பூட்டி
உள்ளூரில்	கூர்மையாய்	பெங்களூர்
ஊரில்	சனங்கள்	மூர்க்கமாய்
ஊருக்கு	சூது	மூர்க்கமான

திருடன் பிடிபட்டது.

அம்மா, ஊருக்கு வெளியே கொட்டு சத்தம் கேட்கிறதே, அதென்ன?

கிராமத்தில் கூத்தாடிகள் கூத்தாடுகிறார்கள், அதினாலேதான் கொட்டு சத்தம் கேட்கிறது.

ஆம், அப்படியானால் ஏன் டாணாக்காரர் அவ்வளவு மூர்க்கமாய் ஓடுகிறார்கள்?

அவ்விடத்தில் சூது களவு எதுவும் நடவாத படிக்கு அதிகாரிகள் இவர்களை அனுப்பி இருப் பார்கள்.

அவ்விடத்தில் என்ன சூது நடக்க கூடும்?

கூத்துப்பார்க்க வருகிறவர்கள் மிகவும் கூட்ட மாய் இருப்பார்கள்; அந்த சமயம் பார்த்து திருடர் சிறியவர் பெரியவர்களுடைய நகைகளை அறுத்துக்கொண்டு ஓட்டம் பிடிப்பார்கள்; இப் படி நடக்காதபடிக்கு டாணுக்காரர் அவ்வூருக்கு போகிறார்கள்.

அம்மா, அவ்வூரிலிருந்து சனங்கள் திரண்டு வருகிறார்களே! அதென்ன?

பொறு, என் மகனே! கிட்டவந்தால் தெரியும்.

நாலுடாணுக்காரர் ஒருவனை பிடித்துக்கொண்டு வருகிறார்கள். அவன் கைகளில் என்னவோ போட்டு பூட்டி இருக்கின்றது.

என் அவன் கைகளை பூட்டி இருக்கிறார்கள்? இத்தனைபேர் என் அவனோடு கூட ஓடி வரு கிறார்கள்?

அவ்வூரில் அவன் எதாகிலும் களவுசெய்து இருப்பான்; ஒருவேளை நகைகளை திருடி இருப்பான்; அதினாலே தான் அவனை பிடித்துக் கொண்டு போகிறார்கள்.

இப்போது அவனை எங்கே கூட்டிக்கொண்டு போகிறார்கள்?

அவனை டாணாவுக்கு கொண்டுபோய் அங்கே அடைத்து வைப்பார்கள். பின்பு நியாயாதிபதியிடத்தில் கூட்டிக்கொண்டுபோவார்கள். அவர் அவன் காரியத்தை கூர்மையாய் விசாரிப்பார்; அவன் திருடினது மெய்தான் என்று அவருக்கு தோன்றினால், அவர் அவனை அவன் குற்றத்திற்கு தகுந்தபடி கடுமையாகவாவது இலேசாகவாவது தண்டிப்பார்.

இப்படிப்பட்ட திருடர் இதைவிட குரூரமான வேலைகளையும் செய்வார்கள், அல்லவா?

ஆம், சிறு பிள்ளைகள் நகை போட்டுக்கொண்டு வெளியே விளையாடுவதை இவர்கள் கண்டால் அவர்களை குரூரமாக கொன்றுபோட்டு நகைகளை திருடிக்கொண்டு ஓடிப்போவார்கள். இப்படி அநேகந்தரம் உள்ளூரில் நடந்தது உண்டு. ஆதலால் பள்ளிக்கூடம் முடிந்தவுடன் நேராக வந்துவிடு; இல்லாவிட்டால் திருடர் உன்னைக்கூட பிடித்து அடித்து துன்பப்படுத்தி ஓடிப்போவார்கள்.

இரண்டு பிள்ளை சரித்திரம்.

பெங்களூரைச்சேர்ந்த அலசூர் என்னும் ஒரு ஊரில் நாராயணநாயகர் என்ற ஒரு உபாத்தியாயர் ஒரு பள்ளிக்கூடம் வைத்து பணம் சம்பாதித்து காலம்தள்ளி வந்தார். அந்த பள்ளிக்கூடத்தில் படித்த பாண்டுரான் கோட்டுரான் என்கிற இருவரில் பாண்டுரான் மிகவும் திருடன்; சரியாய் பள்ளிக்கூடத்திற்கு வரமாட்டான்; குரூரமான வேலைகளை எல்லாம் செய்வான்; சூதாடுவான்; பள்ளிக்கூடம் என்றால் அவனுக்கு அதிக கசப்பாய் இருக்கும். இப்படி அவன் படிக்காமல் கெட்டுப்போனான். கோட்டுரான் அப்படிப்பட்டவன் அல்ல. அவன் எல்லாருக்கும் முந்தி தானே பள்ளிக்கூடத்திற்கு வந்துவிடுவான்; தன் பாடங்களை எல்லாம் கிரமமாகவும் சுறுசுறுப்பாகவும் படித்துவருவான்; மூர்க்கரை ஆவது சூதாடிகளை ஆவது கண்டால் கிட்ட நெருங்கமாட்டான்; இப்படி நன்றாய் படித்து தேறினதினாலே அவனுக்கு இடையூறு இல்லாமல் ஒரு நல்ல உத்தியோகம் கிடைத்து, மிகவும் சவுக்கியமாய் இருந்தான். ஆனால் பாண்டுரானுக்கு வேலை அகப்படாததினாலே பிச்சை எடுக்கும்படி நேரிட்டது.

ஊ = ூ.

ணூ | தூ | நூ | லூ | றூ | னூ

அபயம்	குட்டை	பிரயாணம்
அரபியர்	கூடாரம்	புடைப்பாக
ஆச்சரியம்	திமில்	மூட்டைகள்
ஆவலாக	தூரத்தில்	மூன்று
ஏற்றி	தொண்ணூறு	வளைந்தரம்
ஒட்டகம்	நூதனம்	வேலூர்
கன்னனூர்	நூறு	வேற்றூரார்

ஒட்டகம்.

அம்மா, அதோ தூரத்தில் ஒரு பெரிய மிருகம் வருகிறது; அதின் மேல் இரண்டு மூன்று பேர் உட்காந்துகொண்டு வருகிறார்கள்; அதின் பின் அந்தமாதிரி தொண்ணூறு மிருகம் வருகிறது போல் இருக்கிறது.

ஆம், அது பெரிய மிருகம் தான். அது பார்வைக்கு வெகு நூதனமாய் இருக்கின்றது அல்லவா?

ஆம், அம்மா; அது பார்வைக்கு வெகு நூதனமானது தான்! ஒரு விதமாய் இருக்கிறது; அதின் பெயர் என்ன?

அதின் பெயர் ஒட்டகம். வேலூரில் இருந்து பெங்களூருக்குப் போகிறது. பெங்களூர் ஒட்டகங்கள் இருக்கிற இடங்களில் ஒன்று.

அம்மா, அது மிகவும் உயரமாய் இருக்கின்றது; மேலும் அதன் நடை ஒரு மாதிரி.

ஆம் சுந்தரம், அதன் வாலைப்பார்; அது மிகவும் குட்டையானது, அல்லவா?

ஆம்; ஆனால் அதன் முதுகில் புடைப்பாக உயர்ந்து இருக்கிறதே; அதென்ன?

அதற்கு திமில் என்று பெயர்.

அம்மா, அது என்ன தின்னும்? வைக்கோலா, புல்லா?

புல்லும் வைக்கோலும் தின்னும். ஆனாலும் அதற்கு வேப்பிலைதான் அதிக பிரியம்; அதைதான் அது மிகவும் ஆவலாக தின்னும்.

அதின் முதுகில் மூன்று பேர் உட்கார்ந்து கொண்டு தங்கள் மூட்டைகளையும் அதன்மேல் ஏற்றி இருக்கிறார்களே; ஒட்டகத்துக்கு நோகாதா, அம்மா?

டிக்கொண்டு

நோகாது; அது இந்தபளுவைவிட நாலுபங்கு அதிகமான பாரத்தையும் சுமக்கும். முக்கியமாய் அது புல் சலம் முதலியவை இல்லாத மணல் காடுகளில் சலம் குடியாமல் வெகு தூரம் பிரயாணம் பண்ணும்.

அம்மா, இதற்குமுன் நான் ஒட்டகத்தைப் பார்த்ததே இல்லை. இப்போதுதான் நான் முதல் முதல் பார்த்தேன். இந்த ஊரில் என் அவைகள் வருகிறதில்லை? எருமைகளும் எருதுகளும் இருப்பதுபோல அதிகமாக ஒட்டகங்கள் என் இங்கே இல்லை? ஒட்டகங்களைவிட யானைகளைக்கூட அதிகமாய்க் காண்கிறோமே!

ஆம் அப்பா; யானை இந்தத் தேசத்து மிருகம். இங்கே மலை அடுத்த காடுகளில் யானைகள் அதிகம். ஒட்டகம் அப்படி அல்ல. வேற்றூரார் ஆகிய கபூலர், அரபியர் இவர்களுடைய தேசத்தில் ஒட்டகங்கள் பலுகும். அங்கே அவை மிகுதியாய் உண்டு.

அம்மா, அந்தத் தேசத்தாருக்கு ஒட்டகத்தினால் என்ன உபயோகம்?

மகனே, அந்தத் தேசத்தில் விசாலமான மணல்வெளிகள் அதிகம். வண்டிகளாவது

மாடுகளாவது இந்த வெளிகளில் போவது வருத்தம், ஆனால் ஒட்டகங்கள் சுலபமாய் நடக்கும். அங்கே பிரயாணம் போகிறவர்களுக்கு ஒட்டகங்கள் மிகவும் அவசியமான வாகனம். அவற்றின்மேல் ஏறி மணல்வழியாய் ஓடினால் ஓடுகிறவர்களைத் தொடர்ந்துபிடிக்கமுடியாது.

அரபியர் ஒட்டகத்தை தின்பார்கள் ; அதின் பால் அரபியருக்கு மிகவும் பிரியம் ; அதின் தோலினால் கூடாரம் செய்து அதில் குடியிருப்பார்கள்.

என்ன ஆச்சரியம்! அரபியருக்கு ஒட்டகம் என்கிற ஒரு மிருகத்தினால் இத்தனைபிரயோசனம் உண்டாகின்றதா?

ஆம், நமக்கு குதிரை, ஆடு, மாடு, வண்டி முதலானவை எவ்வளவு பிரயோசனப்படுகின்றனவோ அப்படியே ஒட்டகமும் அரபியருக்கு பிரயோசனப்படுகின்றது.

பொல்லாதவர்களை நம்பினதினால்
நேர்ந்தகெடுதி.

காக்கையையும், நரியையும், புலியையும் மந்திரிகளாக வைத்து ஒரு சிங்கம் அரசாண்டு

கொண்டு இருந்த காட்டில் ஒரு ஒட்டகம் பாதை தப்பி வந்தது. சிங்கம் தயை உள்ளது ஆகை யால் அந்த ஒட்டகத்திற்கு அபயம் கொடுத் துத் தன்னிடத்தில் இருக்கச் சொல்லிற்று. இத ஞல் மந்திரிகளுக்குப் பொறுமை உண்டாயிற்று.

இப்படி இருக்கையில் ஒருநாள் சிங்கம் வியாதியினுல் இரைக்கு போகக்கூடாமல் தனக்கு இரை தேடிக்கொண்டுவரும்படி மந்திரிகளை அனுப்ப,—அவைகள் அலைந்து பார்த்தது போல காலத்தைப் போக்கி, சும்மா திரும்பி வந்தன. சிங்கம்—ஆகாரம் எங்கே—என்று கேட்க,—ஒன்றும் அகப்பட இல்லை, தங்க ளுக்கு வேண்டுமானுல் எங்களைப் புசிக்கலாம்— என்று மந்திரிகள் சொல்லின. அதற்கு, சிங்கம்— உங்களைத் தின்று என் பசி ஆறுமா?—என்ன இதை எல்லாம் பார்த்திருந்த ஒட்டகம்,— ஆனுல் என்னைப் பட்சியுங்கள்—என்றது. இப்படி சொல்லி வாய்மூடும் முன்னே, மந்திரிகள் எல்லாமாக ஒரு நொடியில் அதன்மேல் பாய்ந்து கொன்று ராசாவும் தாமுமாக தின்றுவிட் டன. ஆகையால் பொல்லாதவர்கள் சகவா சத்தில் எள்ளளவும் நம்பிக்கை வைக்கலாகாது.

ஈ = ீ

க் + ஈ = கீ

ஈ | கீ | சீ | டீ | ணீ | தீ | நீ | பீ | மீ | யீ | ரீ
லீ | வீ | ளீ | றீ | னீ

இருப்பீர்கள்	சீனதேசம்	பிரீதி
ஈயை	சொல்லுகிறீர்களா	பிரித்து
உடலை	தண்ணீரிலா	புத்தியீனமாய்
ஒண்டி	திடீர்	பெருமாரி
கம்பளிப்பூச்சி	தீன்	போனீர்கள்
கீறு	நீங்கள்	மீது
சிலந்திப்பூச்சி	நீலவர்ணமான	முரடர்
சீக்கிரமாய்	நூலாகநூற்று	வானரங்கள்
சீலை	பனீர்	வீட்டிக்கு

பட்டு.

அண்ணா, நேற்று இராமன் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்தாரே அவரை நீ பார்த்தாயா?

ஆம், நான் பார்த்தேன், அவரைக்குறித்து ஏன் கேட்கிறாய்?

அவர் நீலவர்ணமான ஒரு சட்டை போட்டுக் கொண்டு வந்தாரே; அதென்ன?

அது பட்டுச் சட்டை; அது அதிக விலை பெறும். பட்டு மெதுவும் நேர்த்தியுமாக இருக்கிறதினால் அநேகருக்கு பட்டில் பிரீதி.

அது பளபள என்று மின்னி வெகு மேன்மையாய் இருந்ததே; அது என்?

பட்டு எல்லாம் அப்படி தான் இருக்கும். பருத்தியினால் நெய்கிற சீலை அப்படி இருக்க மாட்டாது.

பட்டு என்றால் என்ன? அதை எனக்கு நன்றாகச் சொல்லு.

பட்டு ஒரு விதமான பூச்சியிலிருந்து உண்டாகின்றது. அதற்கு பட்டுப்பூச்சி என்று பெயர்.

அந்தப் பூச்சி எந்த மாதிரி இருக்கும்? ஈயைப் போலவா, எறும்பைப்போலவா?

அது கம்பளிப்பூச்சியைப்போல இருக்கும்; ஆனால் கம்பளிப்பூச்சியைப்போல அதற்கு மயிர் இராது. அதின்மேல் கோடுகள் கீற்று கீற்றாக இருக்கும்.

அந்தப் பூச்சி எங்கே இருக்கிறது? தண்ணீரி லா, தரையிலா?

தண்ணீரிலும் அல்ல; தரையிலும் அல்ல; ஒருவிதமான மரத்தின் இலையில் ஒட்டிக்கொண்டு இருக்கும்.

அதின் தீன் என்ன, அண்ணு?

அது இருந்து வளர்கிற அந்த மரத்தின் இலைகள் தாம் அதற்கு தீன். பட்டுப்பூச்சியை வைத்து வளர்க்கிற இடங்களில் தினம் தினம் புதிய இலைகளைப் போடவேண்டும். போடுகிற இலைகளை அது ஒருநாளுக்குள் மெத்தவும் தின்றுவிடும்.

அப்படியா அந்தப் பூச்சி எப்படி பட்டு உண்டுபண்ணுகிறது?

சிலந்திப் பூச்சி மூலைகளில் ஒரு விதமான வலை பின்னுகிறதை பார்த்திருப்பாய், அல்லவா? எவ்வளவு சீக்கிரமாய் பின்னும்! அதுபோல் பட்டுப் பூச்சியும் பட்டு நூற்கும்; ஆனல் அந்த பட்டு சிலந்திப் பூச்சியின் வலைகள்போல் இராது. பந்து போல உருண்டை உருண்டையாக இருக்கும். பட்டுப்பூச்சி அந்த உண்டையை தன் உடலைச் சுற்றிப் பின்னி அதின் உள்ளே கிடக்கும். உண்டை சுற்றுகிற வேலைமுடிந்துபோனவுடனே

பட்டுப்பூச்சி உறங்கிப்போகும். அப்பொழுது மனிதர் அந்த பூச்சியை வாங்கிவிட்டு அந்த பட்டுண்டையை எடுத்துக்கொண்டுபோய் அதைப் பிரித்து பட்டு நூலாக நூற்று பலவிதமான பட்டுச் சீலைகளை நெய்வார்கள்.

பட்டுப்பூச்சிகள் நம்முடைய தேசத்தில் உண்டா?

நம்முடைய தேசத்தில் உண்டு. முதல் அவை சீனதேசத்திலிருந்து வந்தன.

அந்தப் பெரியவர் போட்டுக்கொண்டு வந்த சட்டையின் மாதிரியான பட்டுத்துணி எங்கே நெய்யப்படுகிறது? இங்கேயா, அல்லது சீன தேசத்திலா?

அந்த மாதிரி பட்டுத்துணி வெகு சிறப்பானது. சீனுவிலிருந்து வருகிறது.

முரடருக்குப் புத்திசொன்னதனுல் நேரிட்டது.

ஒரு ஆலமரத்தின் மீது சில கிளிகள் கூடு கட்டிக்கொண்டு வெகு காலமாக வாசம் பண்ணிக்கொண்டு இருந்தன. ஒரு நாள் இராத்திரியில் வானம் கறுத்து, இடி திடீர் திடீர் என்று இடித்து, மின்னல் பளீர் பளீர் என்று மின்னிக்கொண்டு இருந்தது. பெரும் காற்று அடித்து

பெருமாரி பெய்தது. அந்த மரத்தில் இருந்த கிளிகள் தங்கள் தங்கள் கூடுகளில் சுகமாய் குடி இருந்தன. ஆனால் அந்த மரத்தில் சில குரங்குகளும் இருந்தன. அவைகள் குளிர் பொறுக்கமாட்டாமல் மரத்தின் அடியில் இறங்கி வந்து அதன் மறைவில் வருத்தத்தோடு குளிரினால் நடுங்கிக்கொண்டு ஒன்றி இருந்தன. அவைகளைப் பார்த்து கிளிகளில் ஒன்று அவைகளுக்கு புத்தியுண்டாக்கலாமென்று அன்புடன் சொன்னதாவது:—ஓய் வானரங்களே, சுவாமி உங்களுக்கு கையும் காலும் கொடுத்து இருக்கிறாரே; நீங்கள் ஏன் குடி இருக்க ஒரு இடம் செய்துகொள்ளாமல் போனீர்கள்; இனிமேல் புத்தியீனமாய் இராமல் எங்களைப் போல ஒரு இடம் தேடிக்கொள்ளுங்கள்; அப்போது இப்படிப்பட்ட காலத்தில் நனைந்து அவதிப்படாமல் பத்திரமாய் இருப்பீர்கள்—என்றது. அப்போது அந்த குரங்குகளுக்கு கோபம் வந்து, மரத்தின்மேலேறி, அற்பமான பட்சிகளாகிய நீங்கள் எங்களுக்கு புத்தி சொல்லுகிறீர்களா என்று கிளிகளின் வீடுகளைப் பிரித்து எறிந்துவிட்டு அவைகளையும் கொன்று போட்டன. ஆதலால் மூடனுக்குப் புத்தி சொல்லப்படாது.

ழ்

ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே
ழை | ழொ | ழோ | ழ்

அல்பதுளி	செழிக்கும்	பாழொன்றும்
அழைக்கிறாய்	துக்கித்து	பொழியாவிட்டால்
இதழ்	தோழர்கள்	மழை
எழுந்திருந்து	நீர்த்திவலை	மாரி
கீழே	பாழாய்	வளப்பமாய்
கீழோர்	பாழென்கிறாயா	விசனப்பட்டு

மழை.

அக்கா, எழுந்திருந்து சீக்கிரம் வா, வந்து பார்!

என், சின்னதம்பி, இவ்வளவு அவசரமாக அழைக்கிறாய்?

இப்படி கீழே இறங்கி வந்து பார்; வானம் எல்லாம் கறுப்பாய் இருக்கின்றதே! அதேன்? மின்னலும் மின்னுகின்றது.

ஆம், ஆம். இப்பொழுது மழை பெய்யும்; மேகங்கள் எங்கும் பரவி அதிகமாய் தடித்து இருக்கின்றன.

மழை வருமா? அது உனக்கு எப்படி தெரியும்?

மழை பெய்கிறதாய் இருந்தால் தான் மேகங்கள் கறுப்பாகும், குளிர்ந்த காற்று வீசும், மின்னல் மின்னும், இடி இடிக்கும்.

ஆம் அக்கா, நீ சொன்னது எல்லாம் சரிதான். இதோ, பளிச்சு பளிச்சு என்று மின்னுகிறது; மழை தூறுகிறது; ஆனால் அத்தனை பலமாய் பெய்யவில்லை. முதல் முதல் மெதுவாக தூறி, இருக்க இருக்கப் பெரும் துளிகள் நெருங்கி விழுமோ?

அப்பப்பா! எவ்வளவு பலமாய் இடி இடித்தது கேட்டாயா? படபட என்று இடித்து காது அடைத்துப்போய்விட்டது. மறுபடியும் இப்படி இடிக்குமோ? எனக்கு பயமாய் இருக்கிறது.

மின்னல் மின்னும்போது பார்த்தால் கண் விழுந்து போகிறதுபோல் இருக்கிறது. அப்பா! எவ்வளவு கடுமையான வெளிச்சம்! வீட்டுக்குள் போவோம் வா.

ஆம், பார்! மழை இப்பொழுதுதான் மிகவும் பலமாய் அடிக்கிறது. மழை பெய்தால்தான் புல் முதலானவை மிகவும் செழிப்பாய் உண்டாகும். குளங்கள் ஏரிகள் நதிகள் நிறைந்து மனிதருக்கும் மிருகங்களுக்கும் நல்ல சவுக்கியம் உண்டாகும். வயல்களில் பயிரிட தண்ணீர் பாயும். மழை பெய்தால் பாழொன்றும் இல்லை, பெய்யாவிட்டால் ஊர் எல்லாம் பாழாய் இருக்கும்.

என்ன அக்காள்? மழை பெய்தால் தானு புல்லு பழம் முதலானவை உண்டாகும்? இல்லாவிட்டால் பாழென்கிறுயா? முன் தானே புல்லு மிகவும் நன்றாய் முளைத்து இருக்கின்றதே.

ஆம், மழை பெய்தபடியால் தான் புல்லு வளப்பமாய் முளைத்தது. மழை பெய்தால் வாழை முதலான மரங்களும் தழைக்கும். மழை பொழியாவிட்டால் முன்னே சொன்னபடி பூமியிலே உள்ள பூண்டு செடி செட்டு முதல், மனிதர் வரையிலும் எல்லாம் பாழாய் போகும். மழை பெய்தால்தான் நமக்கு எல்லாம் செழிக்கும்; இல்லாவிட்டால் புல்லின் ஒரு இதழ்கூட முளையாது. நிலம் வரண்டு வெட்டவெளியாய்ப் போகும்.

பலதுளி பெருவெள்ளம்.

ஒரு காலத்தில் மப்பு மழை இல்லாமல் கடும் கோடையாய் இருந்தது. அப்போது வயல்கள் எல்லாம் காய்ந்து பயிர் எல்லாம் தண்ணீர்க் குச்செத்து வாடி வதங்கி தரையோடு தரையாய்ப் போயின.

இப்படி இருக்கையில் ஆகாயத்தில் உயர்ந்த மேகத்தில் இருந்த ஒரு நீர்த்திவலை தன்னுடைய தோழர்களில் ஒன்றைப்பார்த்து—அண்ணு, பூமி யைப்பார்த்தாயா? எப்படித்தண்ணீர்க்குத்தவிக்கி றது. பயிர்கள் என்ன பாடு படுகின்றன பார்—என்றது. அதற்கு அவைகளில் ஒன்று—ஆம், நீ சொல்வது சரிதான். அல்ப துளிகளாகிய நீயும் நானும் பார்த்து என்ன? விசனப்பட்டும் என்ன? நம்மால் என்ன செய்யக்கூடும்? என்னத் திற்கு வீணுன பேச்சு, சும்மா இரு—என்று சொல்லிற்று. இது கேட்ட திவலையானது—ஒகோ அண்ணு! ஏது நீ இப்படி சொல்லு கிருய்? ஆயிரம் மாகாணி அறுபத்து இரண் டல்லவோ? காணிகாணியாய்ச் சேர்ந்து தானே கோடி ஆகிறது? நாம் ஒவ்வொருவரும் நம்மால் செய்யக்கூடிய சகாயத்தைச் செய்தால், ஆனது ஆகட்டும்—என்று சொல்லி, அவைகள்

எல்லாம் பார்த்துக்கொண்டு இருக்கையிலேயே— நான்கீழே இறங்கிப்போகிறேன், உங்கள் பிரியம், நீங்கள் வேண்டும் ஆனால் இருக்கிற இடத்தில் இருங்கள்—என்று தன் இடத்தை விட்டுக் கீழே பூமியில் இறங்கிற்று. இதைக் கண்ட வேறுசில, தாங்களும் இறங்கின. இப்படி ஒன்றைப்பார்த்து ஒன்று எல்லாத் திவலைகளும் பூமியில் இறங்க பெருமழை ஆயிற்று. அதிக மழை பெய்யவே நாடு எங்கும் வாடிப்போயிருந்த பயிர் தலை நிமிர்ந்து செழிப்பாய் வளர்ந்தது. முன்னே என்ன செய்வோம் என்று துக்கித்து இருந்த ஊராருக்கு மகிழ்ச்சி பிறந்தது. ஒவ்வொரு திவலை யும் தனித்தனி உதவாமல் போனாலும் பல துளி சேர்ந்தால் பெருவெள்ளம் ஆகும் என்று முன்னோர் சொல்லியிருக்கிற பழமொழிமெய்யே.

இதனால் அறியவேண்டியது என்னவென்றால், நாம் ஒவ்வொருவரும் தம்தம்மால் ஆனமட்டும் நன்மை செய்யவேண்டும் என்பதே. நாம் கீழோர் என்றும் நாம் செய்வது அற்பம் என்றும் மனம் தளரக்கூடாது. எல்லோரும் இப்படியே நினைத்து தங்கள் தங்கள் பாட்டில் ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்துவிட்டார்களே ஆனால், உலகத்தின் காரியங்கள் எப்படி நடக்கும்?

ஞ

ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே
ஞை | ஞொ | ஞோ | ஞ்

அஞ்ச	குஞ்சு	பூஞ்சோலை
அஞ்சாத	கொஞ்சம்	மஞ்ஞை
அஞ்சினவன்	சஞ்சலம்	மிஞ்சின
ஆஞா	ஞாபகம்	வஞ்சகம்
ஆஞி	ஞாயிரு	வஞ்சித்தல்
ஆபத்து	ஞேயம்	வறிஞர்
எக்கல்	நூல்	வாசி
கஞ்சி	நெஞ்சுள்ள	வீழுப்பு

குள்ள நரிக்கு பதிலாக ஓநாய்
பிடிபட்டது.

மாணிக்கம் வா, ஞாயிறு புறப்படுகிறதே; நாம் கொஞ்சநேரம் அந்த பூஞ்சோலைப் பக்கம் போய் உலாவி வருவோம்.

ஆஞா, அதோ மஞ்ஞை ஆடுகிற இடத்தில் பாருங்கள்; ஒரு நரி ஓடுகின்றது.

ஆம், அது கொஞ்ச நேரத்துக்குள் ஓடி மறைந்துவிட்டது. நரி அதிக வஞ்சகமுள்ள மிருகம்.

ஆஹா, அதோ ஒரு குறவன் மறைந்து வருகிறான்; அது என்?

பொறு, கொஞ்சநேரம் இவ்விடத்தில் நின்று பார்ப்போம்.

அவன் நரியை வஞ்சித்துப் பிடிக்க குழியை வெட்டித் திரும்புகிறானே? நரி அவனுக்கு என்னத்திற்கு? அவன் அதைத் தின்பானா, ஆஹா?

ஆம், குறவர் வறிஞராய் இருப்பார்கள், அதனால் நரி தின்பது வழக்கம் தான்; அதன் தோலை விற்றும் கஞ்சி குடிப்பார்கள்.

அவன் கையில் கொம்புகளும் இலைகளும் இருக்கின்றன, பார்.

குறவன் நரியைப் பிடிக்க குழியை வெட்டி அதன்மேல் கொம்புகளைப் பரப்பி இலைகளால் மூடி அதின்மேல் மணலைத் தூவி ஒரு கோழிக் குஞ்சையாவது வேறெந்த இரையையாவது அங்கே கட்டி வைப்பான். அப்போது அந்த நரி வந்து அந்த இரையைக் கவ்வும்; உடனே கொம்பு

கள் விலக, அந்த நரி குழிக்குள் விழுந்துவிடும்; பிற்பாடு குறவன் ஓடிவந்து அதைப் பிடித்துக் கொள்வான்.

அவன் அஞ்சினவன்போல் மிஞ்சின வேகத்தோடு ஓடிவருகிறானே; என் பயப்படுகிறான்? ஓ! ஓ! ஒரு ஓநாய் ஓடிப்போகின்றது. 'அஞ்சாத நெஞ்சுள்ள ஓநாய்!' அதற்கா, பயந்து ஓடுகிறான்?

ஆம், நரி பிடிக்கலாம் என்று மிக ஆசையோடு போய்ப்பார்த்த குறவன் ஓநாயை பள்ளத்தில் கண்டவுடன் திகில்பட்டு ஒருபக்கம் ஓட, ஓநாயும் இவனைக் கண்டு வெருண்டு எக்கி எக்கிக் குதித்து அந்தப் பக்கம் ஓட்டம் பிடிக்கிறது.

'ஆடு பிடிக்க காடி அகப்பட்டது' போல் ஆயிற்று.

ஒன்றாவது நன்றாய் அறிந்தால் நல்லது.

ஸ்நேயமாய் இருந்த ஒரு பூனையும் ஒரு நரியும் ஒரு நாள் கூடிவந்து ஒரு இடத்தில்நின்று பேசிக் கொண்டு இருந்தன. அப்போது நரி பூனையைப் பார்த்து:—சிநேகிதனே, ஏதாவது ஆபத்து வந்தால், அதற்குத் தப்பிக்கொள்ள. எத்தனை

உபாயங்கள் உனக்குத தெரியும்,—என்று கேட்டது. அதற்குப் பூனை நரியுடன்:—எனக்கு ஒரே ஒரு உபாயம் தான் தெரியும். அந்தைக் கொண்டு நான் தப்பித்துக்கொள்வேன்,—என்றது. அதற்கு நரி பூனையுடன்:—உனக்குத் தெரிந்தது இவ்வளவுதானு? எனக்கு ஏதாவது சஞ்சலமான ஆபத்துவந்தாலும், நான் அஞ்சவேமாட்டேன். அப்படிப்பட்ட ஆபத்துகளுக்குத் தப்பித்துக் கொள்ள எனக்கு அநேக உபாயங்கள் தெரியும்,—என்று வெகு வீரியம் பேசிற்று. இவ்விதமாய்ப் பேசிக்கொண்டு இருக்கையில், வேட்டைநாய்கள் தபதபஎன்று ஓடிவந்தன. பூனை உடனே ஒரு மரத்தின்மேல் ஏறித் தப்பித்துக்கொண்டது. நரியோ, தன் அனேக உபாயங்களில் ஒன்றும் சரியாய் ஞாபகத்துக்கு வராமல், இங்கும் அங்கும் சுற்றிப்பார்க்கிறதற்குள்ளாக வேட்டை நாய்கள் ஓடிவந்து அதைப் பிடித்துக் கொன்றுவிட்டன. இப்படி அது தான் பழக்கம் செய்திருந்த எல்லா உபாயங்களில் ஒன்றினுலாகிலும் தப்பித்துக்கொள்ளாமல், மிகுந்த சஞ்சலத்திற்குள் அகப்பட்டுக்கொண்டது. ஆதலால் அநேக நூல்களைப் படித்தவன் என்று வீணுக வம்பு பேசுகிறதைப்பார்க்கிலும், ஒரு நூலையாவது நன்றாகப் படித்துத்தெரிந்திருக்கிறது வாசி.

ஔ = ெ-ள

கௌ	ஙௌ	சௌ	ஞௌ	டௌ	ணௌ
தௌ	நௌ	பௌ	மௌ	யௌ	ரௌ
லௌ	வௌ	ழௌ	ளௌ	றௌ	னௌ

அகௌரவம்	கௌவுதல்	பௌர்ணமி
அசௌக்கியம்	கௌளி	மகிழ்தல்
ஔரங்கம்	சௌக்கியம்	மௌனம்
கௌசிகன்	சௌரியம்பேச	யௌவனம்
கௌதாரி	தௌவுதல்	வௌவால்
கௌரவம்	பௌத்திரன்	வௌவுதல்

பாட்டனார் சொல்லிய புத்திமதிகள்.

கோதண்டராமனை அவன் தகப்பனார் கூப்பிட்டுப் பாடம் கேட்டார். அவன் சும்மா மௌனமாக இராமல் நன்றாய்ப் பாடம் ஒப்புவித்தான். அதற்காக அவர் மகிழ்ந்து அவனைக் கௌரவப் படுத்தி, ஒரு கௌதாரி வாங்கி வளர்க்கும்படிக்கு அவனுக்கு நாலணா இனாம் கொடுத்தார்.

அவன் அதை வாங்கிக்கொண்டு வெளியே வந்து தன் பாட்டனாரிடத்திலும் மற்றவர்கள்

இடத்திலும் காட்டி,—நான் நல்ல பிள்ளை ஆன தினாலே, தகப்பனார் எனக்கு நாலணா கொடுத் தார்—என்று சௌரியம் பேசி, குதித்துக்கொண் டிருந்தான்.

பாட்டனார் தன் பேரனைப் பார்த்து அவனைக் கூப்பிட்டு மௌனமாய் இருக்கப்பண்ணி அவ னுக்குப் புத்தி சொன்னார். எப்படி எனில்:— கோதண்டராமா, நீ என் பௌத்திரன், என் பிள்ளையின் பிள்ளை, என் புத்தியைக் கேள். நீ நல்ல பிள்ளை யானால் யார் யார் உன்னை வைதா லும், நீ பொறுமையாய் இருந்தால் சவுக்கிய மாய் இருப்பாய்.

நாய் வந்து உன்னைக் கௌவும்படிக்கு நீ அதின்மேல் கல் எறியமாட்டாய்.

மரங்களின் மேல் ஏறி குரங்கு வௌவால் முதலானவைகளைப்போல் தௌவவும்மாட்டாய், தொங்கவும் மாட்டாய்.

நீ உன் பாடத்தை மிகவும் கவனித்துப்படித்து அதன் பொருளை அறிந்து வருவாய்.

எல்லாரும் உன்னை நல்ல பிள்ளை என்று சொன்னாலும், நீ சௌரியம் பேசமாட்டாய்.

வியாதி கண்டு நீ அசௌக்கியமாய் இருக் கும்பொழுது, உன் பெற்றார் எவ்வளவு கசப் பான மருந்து குடிக்கக் கொடுத்தாலும் நீ மறுக் காமல் குடிப்பாய்.

பெற்ருருக்கும் உபாத்தியாயருக்கும் மற்ற பெரியவர்களுக்கும் கீழ்ப்படிந்து அவர்களோடு எதிர்த்து நடக்கமாட்டாய்.

உன்னைப்போன்ற பிள்ளைகளையாவது, உன்னிலும் சிறியவர்களையாவது, எளிய கௌளி, பட்சி முதலிய பிராணிகளையாவது, வருத்தப்படுத்த மாட்டாய். வருத்தப்படுகிற அவைகளை இரட்சிப்பாய்,—என்று இது முதலானவைகளை பாட்டஞர் அவனுக்குப் புத்தியாகச் சொன்ஞர்.

கோதண்டராமன் இவைகள் எல்லாவற்றையும் கவனமாய் கேட்டு அது முதல் தன் பாட்டஞர் சொன்னபடி யெல்லாம் ஒழுங்காக நடந்து வந்தான்.

யௌவன காலத்தில் அவன் நல்ல பிள்ளையாய் வளர்ந்தபடியினலே, பெரியவஞன பொழுதும் எல்லோருக்கும் நல்லவஞகவே இருந்தான்.

மெய் பேசின பையன்.

ஔரங்கம் என்கிற பட்டணத்தில் ஔவையம்மாள் என்பவளுக்கு கௌசிகன் என்னும் குமாரன் இருந்தான். இந்த கௌசிகன் என்பவன் ஒரு நாள் பௌர்ணமியில் வீட்டுக்குள்ளே பந்து ஆடிக்கொண்டிருந்தான். பந்து சுவரில் இருந்த கண்ணுடி விளக்கின் மேலே பட்டு, விளக்கு

உடைந்து போயிற்று. கௌசிகன் மிகவும் பயந்து தன் தாயாரிடத்திலே போய்:—அம்மா, பந்து அடித்துக்கொண்டு இருந்தேன், அது விளக்கின்மேலே பட்டு விளக்கு உடைந்து போயிற்று—என்று சொல்லி அழுதான். தன் மகன் மெய்சொன்னதற்காக தாயார் மிகவும் திருப்தி அடைந்து:—என் பிரிய குமாரனே, அது போனால் போகட்டும், விளக்கு உடைந்த பொழுது பார்த்தவன் ஒருவனும் இல்லாமல் இருந்தும், நீ மெய்பேசினாயே அதுவே எனக்குப் போதுமான நல்ல விளக்காய் இருக்கிறது. நாம் என்ன தப்பிதம் செய்தாலும், அதை மறைக்காமல் உள்ளபடி உண்மையை அறிவித்தால், நமக்கு மன்னிப்பு கிடைக்கும்—என்று சொன்னாள்.

பொய்சொல்வது மிகவும் இழிவு; பொய்பேசத் துணிகிறவன், பிறர் பொருளை வெளவுதல் முதலிய அநியாயம் செய்ய அஞ்சவே மாட்டான். பொய் பேசுகிறவனுக்கு உள்ளத்திலே சமாதானம் இல்லை. மெய் பேசுகிறவனுக்கு உள்ளத்திலே சமாதானம் உண்டு; அதிக மரியாதையும் அவனுக்கு உண்டாகும். ஆதலால் பிள்ளைகளே, நீங்கள் எந்தக் காலத்திலும் பொய் பேசாமல் எப்போதும் மெய்யையே பேசிவாருங்கள்.

(தமிழில் வழங்கிவருகிற கிரந்த அக்ஷரங்களைப் படிக்கிறதற்கான பாடங்கள்.)

37. ஸ் | ஸ | க்ஷ. ௩௭.

ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ | ஸை | ஸொ | ஸௌ

க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ

க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ்

அவஸ்தையாய்	புஸ்தகம்	ஸ்திரீ
கஸ்தி	லக்ஷியம்பண்ணுதல்	க்ஷணத்தில்
சிக்ஷை	லக்ஷிமி	க்ஷமிக்காமல்
பக்ஷமாய்	விருக்ஷம்	க்ஷீணித்து
பக்ஷணங்கள்	ஸ்தம்பம்	க்ஷேமமாய்

சீவசெந்துக்களின் பேரில் தயை.

அம்மா, அந்தப் பூனையை பிடித்துத் தாருங்கள்; அதற்கு நன்ருய் சிக்ஷை செய்யவேண்டும்; ஏனெனில், அதை நான் பக்ஷமாய் வளர்த்து அது க்ஷேமமாய் இருந்தும், அது என்னை வறண்டிவிட்டு விருக்ஷத்தின்மேல் ஏறிக்கொண்டது.

அது என் உன்னை வறண்டிற்று, என் கண்ணே, அதை கஸ்திப்படுத்தினது உண்டோ?

இல்லை, அது மிகவும் கெட்டபூனை, அம்மா.

ஆகையால்தான் அது என்னை வறண்டிக் கஸ்திப்படுத்தி ஓடிவிட்டது.

நீ அதை ஒன்றும் செய்யவில்லையா?

இல்லை, அம்மா; நானும் அதுவும் விளையாடிக்கொண்டு இருந்தோம்; அது என்னைவறண்டிவிட்டு ஓடிப்போயிற்று.

நீ அதைத் துன்பப்படுத்தாமல் அதினுடன் விளையாடிக்கொண்டு இருந்தாயா?

நான் அதன் வாலைப்பிடித்து இப்படி அப்படி ஆட்டினேன்.

ஓ! ஓ! பார்த்தாயா? நீ அப்படி அதை ஆட்டினது அதற்கு அதிக அவஸ்தையாய் இருந்திருக்கும்; அதனால் தான் அது உன்னை வறண்டிற்று.

அப்படி செய்கிறது அதற்கு அவஸ்தையாய் இருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. அது க்ஷணத்தில் நடந்த காரியம்.

பிள்ளைகள் புத்தியில்லாமல் விளையாட்டிற்கு என்று சாதாரணமாய் இப்படி செய்வார்கள்; பூனையின் வாலை இழுத்துக் கஸ்தி பண்ணுவார்கள்; நாயின் காதை இழுத்து அவஸ்தைப்படுத்துவார்கள்; பூச்சிகளைப் பிடித்து கால்களையும் இறகுகளையும் பிடுங்கி வருத்தப்படுத்துவார்கள்.

இப்படி எல்லாம் செய்கிறதினாலே அவைகளுக்கு அதிக நோவு உண்டாகும்.

ஆ! இது மெய்தானா, அம்மா!

மெய்தான்; நான் உன் காதைப்பிடித்து இழுத்தால், உனக்கு நோகாதா? அல்லது ஒரு கொடியன் உன்னைத் தூக்கி குலுக்கி ஆட்டினால், உனக்கு வலிக்காதா?

ஆமாம், அது எனக்கு மிகவும் வாதையாய் இருக்கும்; நான் கூவிக் கூவி அழுவேன்; இப்படி என்று எனக்கு முன்னே தெரியாது.

நல்லது, இப்போது உனக்குத் தெரியுமே; இனிமேல் இப்படி செய்வாய் ஆனால், நீ மிகவும் கெட்டவனும் கொடியவனுமாய் இருப்பாய்.

நான் இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்.

திருட்டு.

க்ஷேமபுரம் என்கிற பட்டணத்தில் லக்ஷ்மி என்று பெயர்கொண்ட ஒரு ஸ்திரீக்கு சுந்தரன் என்று ஒரு குமாரன் இருந்தான்; அவனுக்குப் பத்து வயதாய் இருக்கும்பொழுது, ஒருநாள் அவன் தாய் அவனைச் சில சாமான்கள் வாங்கிக் கொண்டு வரும்படி கடைக்கு அனுப்பினாள். அந்தப் பையன் கடைக்குப் போய் சாமான்களை வாங்கிக்கொண்டு கடைக்காரனுக்கு தெரி

யாமல் ஒரு கத்தியைத் திருடி தன் கையில் இருந்த ஒரு புஸ்தகத்தில் ஒளித்துக்கொண்டு வீட்டுக்கு ஓடி வந்துவிட்டான். வந்து தன் தாயிடத்தில் சாமான்களை எல்லாம் கொடுத்த பிற்பாடு, தான் திருடிக்கொண்டு வந்த கத்தியையும் அவளுக்குக் காண்பித்தான். தாய் அவன் திருடின கத்திக்காக மிகவும் மகிழ்ச்சி அடைந்து பக்ஷணங்களை வாங்கிக் கொடுத்தாள். இப்படியே அவன் திருடிக்கொண்டு வரும்பொழுதெல்லாம், அவனை அவள் திருட்டுக்காக கொஞ்சமும் தண்டிக்காமலும் கோபிக்காமலும் இருப்பாள். இதினால் அவன் ஒன்றையும் லக்ஷியம் பண்ணாமல், திருடிக்கொண்டு வந்து கடைசியில் திருட்டில் மிகவும் தேர்ந்தவன் ஆனான். அப்பொழுது சர்க்கார் சேவகர் அவனைப் பிடித்து அதிகாரியிடத்தில் ஒப்புவித்தார்கள். அதிகாரி அவனை ஸ்தம்பத்தில் கட்டி அடித்துச் சிறைச்சாலையில் போட்டார். அங்கே அவன் மிகவும் வியாதிப்பட்டு க்ஷீணித்துச் செத்துப்போனான். ஆதலால் பிள்ளைகள் பொல்லாத காரியங்களைச் செய்யத் தொடங்கும்பொழுதே, அவர்களைத்தண்டிக்கவேண்டும்; இல்லாவிட்டால் கெட்டுப்போவார்கள்.

ஜ் | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ | ஜே
ஜை | ஜொ | ஜோ | ஜ்

ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ
ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷ்

இராஜாக்கள்	திருஷ்டி	ஜனங்கள்
இஷ்டர்கள்	புருஷோத்தமன்	ஜாக்கிரதை
சந்தோஷமாய்	புஷ்பராகம்	ஜீவனம்
சிஷர்கள்	வஜ்ஜிரம்.	ஜோடு

இரத்தினக் கற்கள்.

அம்மா, இன்றைக்கு ஒரு பெரியவர் பல்லக்கின்மேல் ஏறிக்கொண்டு வந்தபொழுது, வெகு இஷ்டர்களும் ஜனங்களும் அவரைச் சந்தோஷமாய் சூழ்ந்து வந்தார்களே, அவர் யார்?

அவர் தான் நமது ஜாதிக்கு குரு; கூட வந்தவர்கள் அவருடைய சிஷர்கள்.

அவர் தமது கையில் ஒரு மோதிரம் போட்டு இருந்தார்; அதில் பெரிய நேர்த்தியான ஒரு ஜோடு வெள்ளைக்கல் ஜொலித்ததே; அதென்ன?

அது நவரத்தினங்களில் ஒன்று; அதின் பேர் வஜ்ஜிரக்கல். இப்படிப்பட்ட கல்லுகள் அகப்படுகிறது மகா கஷ்டம், இராஜாக்களும் ஆஸ்திக்காரரும் அவைகளை ஆசையுடன் தரிப்பார்கள்.

இப்படிப்பட்ட கல்லுகள் எங்கே அகப்படும்?

அவை மலைகள் ஆற்று மணல் முதலிய ஸ்தானங்களில் அகப்படும்; ஆகிலும் மிகவும் அருமைதான்.

அவைகள் நம்முடைய திருஷ்டிக்கு ஜோதியாகவும் பளபளப்பாகவும் இருக்கின்றனவே, அதேன்?

அவைகள் கண்டு எடுக்கப்படும்போது அப்படி இருக்கமாட்டா. அப்பொழுது அவைகள் அவ்வளவு பிரகாசமும் பளபளப்பும் உள்ளவைகள் அல்ல. ஆகிலும் இரத்தினப்பரிக்ஷை வேலையில் ஜீவனம் பண்ணும் மனிதர் ஒரு யந்திரத்தைக் கொண்டு அதிக ஜாக்கிரதையாக அவைகளை சாணைபிடிக்கிறதினால அவைகள் சூரியன்போல் காந்தியும், ஜோதியும் உள்ளவைகள் ஆகின்றன.

புருஷோத்தமன் கடுக்கனில் ஒரு கல் கண்டேன்; அது வஜ்ஜிரத்தைப்போல் வெண்மையாய் இருக்கவில்லை. அது என்ன?

அநேக ஜாதி கல்லுகள் உண்டு; அவைகளில் விசேஷமான சிலவற்றை நவரத்தினங்கள் என்று சொல்லுவார்கள்; அவைகளின் பேர் என்னவென்றால்.—கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வஜ்ஜிரம் என்பவைகள் தாம்; ஆக ஒன்பது ஜாதி கல்லுகள்.

ஆ, ஆ! நான் இத்தனை வகைகள் பார்த்ததில்லை; இந்த விஷயத்தைக்குறித்து இதன் முன்பு இவ்வளவு நேரம் பேசினதும் இல்லை. மாணிக்கம் சிவப்பும் பிரகாசமுமான கல்லு அல்லவா? அதை ஜனங்கள் கடுக்கன்களில் கண்டிருக்கிறேன்.

ஆமாம்; நீ மரகதம் கூட பார்த்திருப்பாய்; அது பிரகாசமான பச்சைநிறக் கல்லு; அதையும் ஜனங்கள் மோதிரத்திலும் முருகிலும் கட்டுகிறது உண்டு.

ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ | ஹே
ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ்

ஔஷதம்	பஹு	ஹரிஹரன்
சாஸ்திரி	புரோஹிதர்	ஹனுமந்தன்
சேஷ்டை	மாஸம்	ஹஸ்தினாபுரம்
சொஸ்தம்	மோஹநாங்கி	ஹிதாஹிதம்
சௌக்கியஹீனம்	வருஷம்.	ஹிரணியன்
தக்ஷணம்.	ஹயக்கிரீவன்	

தகப்பனார் தொடாதே என்று இட்டகட்டளையை மீறித் தொட்டதினால் வந்த கேடு.

ஹஸ்தினாபுரத்தில் ஹரிஹரசாஸ்திரி என்றொரு பிராமணர் வைத்தியம் செய்து ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தார். அவரிடத்தில் சிறந்த பலவகை ஔஷதங்கள் இருந்தன. அவர் தேகத் தன்மையை செவ்வையாய் அறிந்து எல்லாவிதமான வியாதிகளையும் சொஸ்தம் பண்ணிவந்தார்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் அந்த ஊர் ராஜா மஹாதேவசிங்கின் இடத்திலிருந்து சேவகர் வந்து ராஜஸ்திரி மோஹநாங்கிக்கு சீதளம் கண்டு தேகம் செளக்கியஹீனமாய் இருக்கிறபடியால் சாஸ்திரியாரை தக்ஷணமே அழைத்துவரும்படி உத்தரவாயிருப்பதாய் தெரிவித்தார். உடனே ஹிரணியன் ஹனுமந்தன் என்னும் தன் சிஷர்களை அழைத்துக்கொண்டு ஒளஷதங்களுடன் அரண்மனைக்குப் புறப்பட்டார்.

அந்த வைத்திய சாஸ்திரிக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. ஹயக்கிரீவன் என்னும் மூத்த பையனுக்கு பன்னிரண்டு வயசு; கெளரி என்னும் இளையபெண்ணுக்கு எட்டு வருஷம் நாலு மாஸம். தகப்பனர் வெளியே போயிருந்த சமயத்தில் இரண்டு குழந்தைகளும் சந்தோஷமாய் விளையாடிக்கொண்டே தகப்பனர் வைத்திய அறையில் புகுந்தார்கள்.

அப்போது ஹயக்கிரீவன், தன் தங்கையைப் பார்த்து,—கெளரீ, அப்பாவினுடைய அறையில் நாம் இருப்பது சரியல்ல, வெளியே போகலாம், வா—என்றான்.

அதற்கு கௌளி—அண்ணு, நாம் தடுக்குசெய்யாமல் சும்மா வேடிக்கையாயிருந்தால் என்ன?—என்று சொல்ல,—

ஹயக்கிரீவன்—சரிதான். இங்கே ஔஷதங்கள் வைத்திருக்கிற பெட்டி இருக்கிறது. இந்த இடத்தில் ஒரு சேஷ்டையும் செய்யவேண்டாமென்று நம் ஐயா சொல்லியிருக்கிருர், அல்லவா? அவர் மஹா புத்திமான். அவர் சொன்ன புத்தியை அசட்டை பண்ணுகிருயோ—என்று கேட்க,—கௌளி—அண்ணு! ஹோ! ஹோ! ஹோ! நானே,மறந்துபோய்விட்டேன்?—என்று சொல்லி, அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் ஆன பின்பு—இதோ பார்! ஐயா பெட்டியைப் பூட்டாமல் மறந்துபோய் விட்டார்—என்று ஔஷதம் வைத்திருந்த பெட்டியைத் திறந்தாள்.

ஹயக்கிரீவன்—கௌளி, இதென்ன, இது! ஏது இன்றைக்கு நம் ஐயா கூட ஞாபகம் தப்பிப்போனது? ஏதோ அவஸரம்; இருக்கட்டும், நீ அங்கே ஒன்றையும் தொடாதே—என்றுன்.

கௌரி— அண்ணா, இங்கே ஐயா சர்க்கரை வைத்திருப்பாரோ, அதைப் பார்க்கலாமே, ஔஷதங்களைத்தானே தொட்டால் தண்டிப்பதாய் சொல்லியிருக்கிறார். மற்றது தொட்டால் தப்பல்லவே—என்றாள்.

ஹயக்கிரீவன்—நமக்கு அந்த வித்தியாஸம் தெரியாது. ஆகையால் நீ ஆக்ஷேபம் சொல்லாமல் இங்கே வா,—என்றான்.

கௌரி—அண்ணா, இதோபார், கற்கண்டு இந்த சாடியில் வைத்திருக்கிறது. இதென்ன? அத்தனை வெள்ளையாயில்லை. ஆனாலும் கற்கண்டுதான்;—என்று சொல்லி ஒரு கட்டியெடுத்து தன் வாயில் போட்டுக்கொண்டு அண்ணனுக்கும் கொஞ்சம் கொடுத்தாள்.

கற்கண்டல்லவென்று தெரிந்த ஹயக்கிரீவன்,—அடி கௌரி, எதையோ வாயில் போட்டுக்கொண்டாயே—என்றதற்கு, தங்கை ஒன்றும் சொல்லவில்லை. கொஞ்சநேரமான பிற்பாடு தங்கை,—அண்ணா! அண்ணா! வயிறு வெந்து போய்விட்டது, தலை சுற்றுகிறது, வாந்திவருகிறது,—என்று

சொல்லித் தரையில் விழுந்தாள். ஹயக்கிரீவன் அலறிக்கொண்டு வெளியில் ஓடிவந்து தாயாருக்குச் சொல்ல, அவள்—உடனே வாராவிட்டால் குழந்தைக்கு மரணம் வந்துவிடும்,—என்று புருஷனுக்குச் சொல்லி அனுப்பினாள். இது சங்கதி கேட்டவுடன் சாஸ்திரியாரும் மோசம் வந்து விட்டதென்று பஹுமானத்தையும் பாராமல் ஓடி வந்து பார்க்கையில், குழந்தை பாஷாணத்தை விழுங்கிவிட்டாள் என்று தெரிந்து தகுந்த எத்தனங்களைத் தேடிச்செய்து உயிரை ரக்ஷித்து தப்புவித்து கடவுளுடைய தயவினால் குழந்தை பிழைத்ததென்று அவளை வணங்கிப் புகழ்ந்தார்.

ஆகையால், தொடப்படாது என்று மூத்தோர் கற்பித்ததைத் தொடாமலும், தின்னலாம் என்ற பண்டத்தையே அல்லாமல் மற்ற எதையும் தின்னாமலும், பிள்ளைகள் எப்போதும் எச்சரிக்கையாய் பயந்து நடக்கவேண்டும்; நடவாமல் போனால், உயிருக்கு மோசம் உண்டாகும்.

அஃறிணை = அல்திணை. இஃது = இது.

இலக்க விளக்கம்.

1. ஒரே தெய்வம் உண்டு; அவர் நம்மையும் உலகங்களையும் சகலத்தையும் படைத்துக் காப்பாற்றி வருகிறவர்.

2. இம்மை மறுமை என்று இரண்டு பதவிகள் உண்டு.

உயர்திணை அஃறிணை என்று இரண்டு திணைகள் உண்டு.

3. காலம் மூன்று; இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம். இறந்த காலம் என்பது போன காலம்; நிகழ் காலம் என்பது இப்போது செல்லுகிற காலம்; எதிர் காலம் என்பது இனி வரும் காலம்.

4. திக்கு நாலு; வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு. இஃது திசை எனவும் படும்.

5. பொறி ஐந்து; மெய், வாய், கண், மூக்கு, செவி.

புலன் ஐந்து; பரிசம் அல்லது ஊறு, ரசம் அல்லது சுவை, ரூபம் அல்லது ஒளி, கந்தம் அல்லது மணம், சத்தம் அல்லது ஓசை.

லோகங்களும் ஐந்து; பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு.

6. சுவை ஆறு; தித்திப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு.

7. கிழமை ஏழு; ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி.

8. பரிசம் எட்டு; வெப்பம், குளிர்ச்சி, மென்மை, வன்மை, சீர்மை, சருச்சரை, திண்மை, நொய்மை.

வேற்றுமை எட்டு.

9. தானியங்கள் ஒன்பது; கோதுமை, நெல், துவரை, பயறு, கடலை, அவரை, எள், உளுந்து, கொள்.

முற்றும்.

உபாத்தியாயர்கள் மாணாக்கர்களுக்கு இதை முதலில் படிப்பிக்

உயிர் மெய் எழுத்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ
ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ
ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ
ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ
ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ
க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ

க் கூடாது. பாடங்கள் முழுவதும் ஆனபின் படிப்பிக்கலாம்.

துக்கள் வருமாறு.

ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்
ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ	ஜ்
ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ	ஸ்
ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ	ஷ்
ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ	ஹ்
க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ	க்ஷ்

பிள்ளைகள் நூறுவரையிலும் எண்ணக் கற்றுக்கொண்டவுடனே
அடியில்சேர்த்திருக்கும்வாய்பாடுகளை கற்பிக்கவேண்டியது.

பெருக்கல் வாய்பாடு.

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16
2	4	6	8	10	12	14	16	18	20	22	24	26	28	30	32
3		9	12	15	18	21	24	27	30	33	36	39	42	45	48
4			16	20	24	28	32	36	40	44	48	52	56	60	64

பைசா வாய்பாடு.

பை.	அ.	பை.	பை.	அ.	பை.	பை.	அ.	பை.	பை.	அ.	பை.	பை.	அ.	பை.	பை.	அ.	பை.
13=	1	1	25=	2	1	37=	3	1	49=	4	1	61=	5	1	73=	6	1
14=	1	2	26=	2	2	38=	3	2	50=	4	2	62=	5	2	74=	6	2
15=	1	3	27=	2	3	39=	3	3	51=	4	3	63=	5	3	75=	6	3
16=	1	4	28=	2	4	40=	3	4	52=	4	4	64=	5	4	76=	6	4
17=	1	5	29=	2	5	41=	3	5	53=	4	5	65=	5	5	77=	6	5
18=	1	6	30=	2	6	42=	3	6	54=	4	6	66=	5	6	78=	6	6
19=	1	7	31=	2	7	43=	3	7	55=	4	7	67=	5	7	79=	6	7
20=	1	8	32=	2	8	44=	3	8	56=	4	8	68=	5	8	80=	6	8
21=	1	9	33=	2	9	45=	3	9	57=	4	9	69=	5	9	81=	6	9
22=	1	10	34=	2	10	46=	3	10	58=	4	10	70=	5	10	82=	6	10
23=	1	11	35=	2	11	47=	3	11	59=	4	11	71=	5	11	83=	6	11
24=	2	0	36=	3	0	48=	4	0	60=	5	0	72=	6	0	84=	7	0

அணா வாய்பாடு.

அ.	ரூ.	அ.	அ.	ரூ.	அ.	அ.	ரூ.	அ.	அ.	ரூ.	அ.
17=	1	1	33=	2	1	49=	3	1	65=	4	1
18=	1	2	34=	2	2	50=	3	2	66=	4	2
19=	1	3	35=	2	3	51=	3	3	67=	4	3
20=	1	4	36=	2	4	52=	3	4	68=	4	4
21=	1	5	37=	2	5	53=	3	5	69=	4	5
22=	1	6	38=	2	6	54=	3	6	70=	4	6
23=	1	7	[illegible]	2	7	55=	3	7	71=	4	7
24=	1	[illegible]	40=	2	8	56=	3	8	72=	4	8
25=	1	9	41=	2	9	57=	3	9	73=	4	9
26=	1	10	42=	2	10	58=	3	10	74=	4	10
27=	1	11	43=	2	11	59=	3	11	75=	4	11
28=	1	12	44=	2	12	60=	3	12	76=	4	12
29=	1	13	45=	2	13	61=	3	13	77=	4	13
30=	1	14	46=	2	14	62=	3	14	78=	4	14
31=	1	15	47=	2	15	63=	3	15	79=	4	15
32=	2	0	48=	3	0	64=	4	0	80=	5	0

End.